விலைரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 சித்திரை 20 றஜப் 8 இதழ் 79

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 3—5—82

## தம்பசிட்டியில் டிராக்டர் விபத்து: இருபது பேர் காயம்

(புலோலி)

தம்பசிட்டிச் சந்தியில் நேற்றுக்காலை 'டிராக்டர்' ஒன்று பாதையைவிட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இருபது பேர் காயமடைந்தனர்.

படுகாயமடைந்த பத்துப் பேர் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் ஆதரவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டுவிழாவும் விளையாட்டுப் போட்டியும் நேற்றுநடைபெற்றது. இவ்விழாவையொட்டி நேற்றுக்காலை இடம்பெற்ற சைக்கிள் ஓட்டப் போட்டியின் போது சைக்கிள்களைப் பின் தொடர்ந்து பொதுமக்கள் சிலர் சென்றனர் என்றும் 'டிராக்டர்' தம்பசிட்டி சந்தியில்குடைசாய்ந்தபோது இதில் பிரயாணம்செய்தவர்கள் காயமடைந்தனர் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தைதொடர்ந்து நேற்றுப் பிற்பகல் நடைபெறவிருந்தஆண்டுவிழா, பரிசளிப்பு வைபவம் ரத்துச்செய்யப்பட்டது.

## விசர்நாய்கடிப்பீதி

(மன்னார்)

மன்னார் பட்டினத்தில் விசர்நாய் கடி பீதி ஏற்பட்டுள்ளது விசர்நாய் கடித்த 5 பேர் மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றன.

(8 ம் பக்கம் பார்க்க)

# போக்லண்ட் தீவுகள் கடும் யுத்தம் நடக்கிறது!

## ஆர்ஜென்டீனாவும் எதிர்த்தாக்குதல்

லண்டன், மே. 2

போக்லண்ட் தீவுகளை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்காக ஆர்ஜென்டீனா விமானப்படைக்கும், பிரிட்டனின் கடற்படைக்குமிடையே கடும்யுத்தம்நடைபெற்றுவருவதாக நேற்றிரவு கிடைத்த கடைசிச்செய்திகள் தெரிவித்தன.

தென் அத்திலாந்திக் சமூத்திரத்திலுள்ள இத்தீவை மீண்டும் கைப்பற்றுவதற்காக பிரிட்டன் கடும்தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாகத்தெரிவிக்கும் செய்திகள்; போக்லண்ட்தீவுகளின் தலைநகரான போட்ஸ்ரான்லியிலுள்ள விமான நிலையத்தை இரவு முழுவதும் பிரிட்டிஷ் றேயல் விமானங்கள் குண்டுவீசித் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்று ஊர்ஜிதப்படுத்துகின்றன.

அதே நேரத்தில் பிரிட்டன் இவ் விமான நிலையத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன். தாக்குதலை நடத்த மாட்டாதென்றும், ஆர்ஜென்டீனா துருப்புகளை இரவு முழுவதும் நித்திரை கொள்ளாதிருக்கச் செய்யும் பொருட்டே தாக்குதலை மேற்கொள்ளுமென்றும் கூறப்பட்டது.

பிரிட்டனின் மூன்று யுத்த விமானங்களையும், இரண்டு ஹெலிகொப்டர்களையும், சுட்டு வீழ்த்தியுள்ளதாக ஆர்ஜெனடீனா அறிவித்துள்ளது. பிரிட்டனின் விரைவுப்போர்க்கப்பலும் சேதப்படுத்தப்பட்டதாக ஆர்ஜென்டீனா தெரிவித்துள்ளது.

ஆர்ஜென்டீனாவின் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும், 3 விமானங்கள் சேதப்படுத்தப் பட்டதாகவும் பிரிட்டன் கூறியுள்ளது.

## சீனவில் தடை

பீக்கிங், மே 2

சீனாவின் தலைநகரான பீக்கிங் நகரில் எச்சில் துப்புதல் அல்லது குப்பை கூளங்களைக் கொட்டுதல் தண்டனைக்குரிய குற்றங்களாக யூலை மாதத்திலிருந்து கணிக்கப்படுமென நகரசபை அறிவித்துள்ளது.

நகரில் கால்நடை வளர்ப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது. [கு]

## நிஸங்கா இன்று கிளிநொச்சி விஜயம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சிக்கு இன்றுகாலை விஜயம் செய்யும்நீதி அமைச்சர் கலாநிதி நிஸங்கா விஜேரத்ன, கிளிநொச்சியில் நவீன முறையில் அமைக்கப்பட்ட நீதிமன்றக்கட்டிடத்தைத் திறந்துவைப்பார்.

இவ்வைபவத்தில் யாழ். அரசாங்கஅதிபர் திரு, தேவநேசன் நேசையா. யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கம், கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

# இனத்திற்கிடையே இரத்தக்களரி வேண்டாம்!

## மேதினக்கூட்டத்தில் 'அமிர்' எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

''இன்று நாம் நெருக்கடியான காலகட்டத்தில் நிற்கிறோம். மானிப்பாய் எம். பி. வீட்டில் நடைபெற்ற சம்பவம் பொறுக்கக்கூடியதொன்றல்ல. ஒரு துப்பாக்கியை கையில் எடுத்துவிட்டால் எல்லோரையும் அச்சுறுத்திவிடலாம் என்று இளைஞர்கள் எண்ணிவிடக்கூடாது. நாம் துப்பாக்கிகளை பலமுறை கண்டவர்கள்; எதிர்கொண்டவர்கள் 'உள்ள உயிர் ஒன்றுதான். போவதும் ஒருமுறைதான்,' என்பதை நன்கறிந்தவர்கள். எமது உயிர், உடல் அனைத்தையும் தமிழ் ஈழத்திற்கென நாம் என்றோ அர்ப்பணம் செய்துவிட்டோமாதலால், இவற்றுக்கு அஞ்சி, எம் மனச்சாட்சிப்படி இனத்திற்கு சரியென நாம் தீர்மானிப்பதை நடைமுறைப்படுத்தாதுவிடப்போவதில்லை. எம் இனத்திற்கிடையே ஓர் இரத்தக்களரியை ஏற்படுத்த சிலர் முயல்கிறார்கள். இதுதவிர்க்கப்படவேண்டும்.''

யாழ். நகர மண்டபத்தில் நடந்த தமிழ் தொழிற்சங்க கூட்டணி மேதினக்கூட்டத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு அ. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது;

''இன்றைக்கு பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை பற்றிப் பேசுவதற்கு நமக்கென்ன அருகதை என்று சிலர் கேட்கிறார்கள். பாலஸ்தீன மக்களின் இயக்கத்தின் பிரச்னைகளை, வசதிகளை நன்கறிந்தே நாட்டுக்கு ஏற்ப எமது இயக்கத்தை நாம் நடாத்திவருகிறோம். பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் கீழும் பல்வேறு கிளை இயக்கங்கள் இருந்தாலும் அனைத்தும் ஒரே தலைமையாக யாசீர் அரபாத்தை ஏற்று இருப்பதினை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

### புதிய இயக்கம்

''இன்றைக்கு தமிழ் இனத்திற்கு புதிய இயக்கம் தேவையென விளம்பரங்கள் நடைபெறுகின்றன. எய்தவன் இருக்க அம்பை நோவதில் அர்த்தமில்லையென்றாலும், இனத்தின் ஒற்றுமையை சிதைக்கமுற்படுபவர்களை அனுமதிக்கமுடியாது. முன்புதந்தை செல்வாவைவிட்டுப் பிரிந்து காவலூர் நவம் கட்சி ஆரம்பித்த காலத்தில் 1966லிருந்து 1969வரை அவர்களுடன் இணைந்து விடுதலை ஏட்டில் திட்டித் தீர்த்த தம்பி ஈழவேந்தன் இன்று தந்தைக்கு வாரிசு தாமெனக் கூறுகிறார்.

''இன்று விடுதலை அணிக்கு தலைமை தாங்கும் பெரியவரிடம், தந்தை முன்பு சென்று எம்முடன் உழைக்க வாருங்கள் என்றபோது 'தென்னங்கன்று நட்டுள்ளேன். வளர்ந்து பயன் கிட்டியதும் வருவேன்' என்று கூறிய காலங்களை நாம் மறந்துவிடவில்லை. சிறிமாவோ அம்மையாரிடம் தந்தை செல்வா பேச்சுவார்த்தை நடாத்திய போது பிரதம பேச்சாளராக கலந்துகொண்ட அமரர் கதிரவேற்பிள்ளை இடைக்கால ஏற்பாட்டுக்கு இசைந்துவிட்டார் என்று தந்தையிடம் கூறி, அவரை தொல்லைப்படுத்தி அறிக்கைவிடச் செய்தவர்கள் ஈழவேந்தனும் அவரைச் சேர்ந்தவர்களுமே அவ்வறிக்கையை கண்டு அவர் மனம் வருந்தி, பேச்சாளராக பின் செல்ல மறுத்தபோது, அவரிடம் சென்று மன்ருடி அவரை மனச்சாந்தி செய்தவர்களான எம்மை இன்று வசைபாடுகிறார்கள் இத் தம்பிமார்கள்.

அவரின் மறைவின் பின்னால் புதுச் சித்தாந்தம்பேசும் இவர்கள், மாவட்ட அபிவிருத்தி சபையை கதிரவேற்பிள்ளை எதிர்த்தார் என்றுமுழுப்பொய் சொல்கிறார்கள் நோய்வாய்ப்பட்டபோதும். கட்சிக்கட்டுப்பாட்டை மதித்து விமானம் மூலம் ஓடிவந்து பாராளுமன்லத்தில் மாவட்ட அபிவிருத்தி சபையை ஏற்றுவாக்களித்தார் அமரர் கதிரவேற்பிள்ளை என்பதை நாடறியும்

''நியமன வேட்டைக்கு அப்பாவி இளைஞர்களை பலிக்கடாவாக்கும் அரசியலை நடத்துகிறார்கள்! தங்களில் ஒருவருக்கு ஆசனம் ஒன்று வழங்கிவிட்டால் பிரச்னை தீர்ந்துவிடும் என்று ஒரு தம்பி சொன்னராம். யார் அவர் என்பதை தேவை வரும்போது மக்கள் முன் வைக்க நாம் தயங்கமாட்டோம். இவர்கட்கு அப்பால்; 4மாதங்கள் வரை தமிழ் ஈழம் அர்த்தமற்றது என்று பத்திரிகைகளில் பேட்டிகள் கொடுத்த தமிழ்க்காங்கிரஸ் காரர்களுக்கும் இப்போது திடீரென தமிழ் ஈழ மோகம் பிறந்திருக்கிறது.

கவசமாக மக்களின் ஒற்றுமை இருந்திராவிடில் இளைஞர்கள் தப்பிப்பிழைக்க முடியாது. மக்களில் 90 சதவிகிதமானோர் கூட்டணியின் பக்கத்திலேயே நிற்கிறார்கள். இவர்களை பகைத்துக்கொண்டு எத்தனைநாள் இவைகள் நடைபெறமுடியும் ஒருசில துப்பாக்கிகளை விட மேலான, பெருமளவிலான துப்பாக்கிகள் வரமுடியுமென்பதை நினைவில்கொள்ள வேண்டும்.

(8ம் பக்கம் பார்க்க)

# தொழிற்சங்கவாதி பொலிஸ் விசாரணையில்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடிச் சந்தியில்நேற்று முன்தினம் ஏற்பட்ட பதட்டம் பின்னர் தணிந்த போதிலும் இரவு முழுவதும் பொலிசார் உஷார்நிலையில் இருந்தனர்.

புலோலி மாலி சந்தியில் மேதினக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் நிகழ்ந்த சம்பவம் தொடர்பாக தொழிற்சங்க வாதி ஒருவர் (சாவகச்சேரியைச்சேர்நதவர்) பொலிஸாரினால் அழைத்துச்செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டு நேற்று முன்தினமிரவு பத்துமணியளவில் விடுவிக்கப்பட்டார்.

**Post of Manager**

A Leading Establishment in Jaffna engage in retail trade requires the services of an energetic middle aged Manager (not exceeding 50 years of age) for one of its Branches. Previous experience in sales promotion is essential.

Salary negotiable. Minimum Rs. 775/- per month (all allowances inclusive). Security of Rs. 5,000/- required on appointment.

Please apply on or before 15th May 1982 giving details of previous experience educational qualfications, etc., with copies of testimonials and names of two referees.

ADVT. NO. 3043,
C/o. Box No. 49,
Eelanadu.
Jaffna. 3043

### மணிவாக்கு

திடீரென்று பைத்தியம் பிடித்தால் மனிதர்கள் என்னதான் செய்யமாட்டார்கள். சிலர் தற்கொலை செய்துகொள்வார்கள். சிலர் கல்யாணம் செய்து கொள்வார்கள்.

— பழமொழி —

# நமது நோக்கு

## காரைநகரில் 'குண்டுவீச்சு'

கொழும்பிலும் கோட்டேயிலும் நடந்தேறிய இந்து மாநாட்டு விழாவும் பாராளுமன்றத் திறப்பு விழாவும் மக்கள் மனத்தில் ஏமாற்றம் அளித்ததற்கு முதற்காரணம் கீழ்த்தரமான அரசியல் பிரசாரம்.

இதன் நச்சுக்காற்று வீசுமிடமெல்லாம் மக்கள் ஆத்மிகச் சுகாதாரம் பேணுமிடமாகாது.

மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும், கவியரங்குகளிலும் விலைமாதுபோல் அரசியல் புகுந்துவிடும் வழக்கம் குறைந்தபாடில்லை. பிரசாரம்இல்லாத பெருவிழாக்கள் இன்று மருந்துக்கும் கிடையாத பண்டங்களா!

இந்தநிலையில், அதுவும் வைதிகவாழ்வுக்கு சிறப்பிடமாக விளங்கும் காரைநகரில், அரசாங்க பாடசாலையான இந்துக் கல்லூரியில் புரட்சிக் கவிஞர் பாரதியாருக்கு ஒரு அறிவுமேடை— அரசியல் மேடையல்ல அமைத்திருப்பதுஒருஅபூர்வமான நிகழ்ச்சியல்லவா?

நேற்று ஆரம்பமான மூன்று நாட்களுக்கு நடைபெறும் இப்பெருவிழாவின் அழைப்பிதழ் எவ்வகையிலும் சாதாரணமானது போல் தோன்றவில்லை.

பேராசிரியர்கள், கல்லூரி அதிபர்கள், வித்துவான்கள் பண்டிதர்கள் பண்டிதைகள் மாணவர்கள், மாணவிகள், பல ஆண் பெண் சிரேஷ்ட, கனிஷ்ட ஆரம்ப பாடசாலைகள், தமிழக அறிஞர்கள், ஈழத்தின் இளந்தலைமுறை கவிஞர்கள், கலைஞர்கள் பாரதியாரைப் பலகோணங்களிலிருந்து 'பிய்த்துப் பிடுங்குகிறார்கள்' இவர்களில் எவரும் அரசியல்வாதிகளாகக் குறிப்பிடுவதற்கில்லை. சபாஷ்!

நல்லறிவே நாட்டின் உயிரெனக் கருதிய மகாகவி பாரதியாருக்கு எடுக்கும் இப்பெருவிழாவில் இவ்வித அமைப்பு பாராட்டுக்குரியது;

பாராட்டு மட்டுமல்ல, நால்வருக்கு குருபூசை; மணிவாசகருக்கு ஒரு சிறப்பான சபை மத்திய சைவ மகா சபை போன்ற நிறுவனங்களிலும் பெரியபுராணம், கந்தபுராணம், கம்பராமாயணம் பாரதம் போன்ற நூல்களில் பெரும் பத்தியும் ஈடுபாடும் கொண்ட பழங்குடி மக்களின் வாரிசுகள வாழும் இச்சிறு நகரில் (உண்மையில் ஒரு தீவு) புரட்சிக் கவிஞனின் நூற்றாண்டுவிழா இவ்வித பெருவிழாவாயமைவது வியப்புக்குரியதுபோல் தோன்றும்.

அப்படியல்ல, புரட்சி யென்றால் நாம் பிரான்சை நினைப்பது வழக்கம் ராஜாதி ராஜாக்களைப் போற்றிய நேரத்தில், பிரான்சில் அரசர்களைச் சிறையில் அடைத்தார்கள்; அரண்மனைகளை அநியாயக் கோட்டைகளாக ஆக்கியபோது, அங்கு பாஸ்டில் (Bastille) உடைக்கப்பட்ட நேரம்; நாம் இங்கு இன்றும் ஆண்டாள் அடிமை என்ற நயவஞ்சகம் நிறைந்த பிரசாரத்தை பேருரைகளாக நிகழ்த்தி பொதுமக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம், அங்கு அன்று சுதந்திரம் விடுதலை என்ற கோஷங்கள் வானைக் கிழித்தன. பிரான்சின் சுதந்திரத்தென்றல் புதுவையில் அவதரித்த பாரதியாருக்கு புத்துலகக் கருத்துக்களுக்கு உறுதிஅளித்தது.

இன்று உலக மகாகவியாகத் திகழும் புரட்சிக் கவிஞன் இன்று இந்தச் சிறு கிராமத்தில் விழாநாயகனாக அழைக்கப்பட்ட வைபவம் இப்பகுதி மக்களின் சிந்தனையை உலுப்பிவிட முடியுமென நம்ப நியாயமுண்டு. அதுவே நாம் கருதும் புரட்சி.

உலகில் எப்பகுதியிலும் வாழத் தெரிந்த இச்சிற்றூர் மக்கள் சிந்தனைத் திறனிலும், செயலாற்றும் வல்லமையிலும் மற்றெவருக்கும் பின்னிற்பவரல்லர். கல்வி, கலாசாரம், விஞ்ஞானம், வணிகம், விவசாயம், கைத்தொழில், சட்டக்கலை, பொறியியல், மருத்துவம், தத்துவநெறி. இவற்றில் எதைத் தொட்டாலும் அதனை உலகளாவிய நிலைக்குத் துலங்கவைக்கும் ஆற்றல் பெற்ற பெரியோர்கள், இக்கிராமத்தில் எளிமையும் பணிவும் நிறைந்த வாழ்வு வாழும் புலமை உடையர்; இதுஒருவிதபுரட்சியல்லவா?

இந்த உள்ளப் புரட்சிக்கும் ஒற்றுமைகாண வாய்ப்பான நிகழ்ச்சியே இன்று நடைபெறும் பாரதி விழாவாகும்.

தெய்வபக்தி, தேசபக்தி, குருபக்தி என்னும் முப்பெரும் பண்புகள் நிரம்பிய சட்டநிபுணர், சமயப் பண்பாளர், அமரர் நமசிவாயம் நடராசா KC அவர்களின் நினைவைக் குறிக்கும் அரங்கில இத்தகைய வைபவம் பொருத்தமானதும் அர்த்தமுடையதுமாகும்; இப்பெரியாரே காரைநகர் மக்களின் வாழ்க்கை முறையின் சிறந்த பிரதிநிதியாவார்.

இந்த உலகத்தில் மனிதன் பிறந்தது வாழ; வாழ என்றால், சமாதானமாக பிறரைச் சுரண்டாமல் வாழ; பிறரை வஞ்சித்தால் தான் வாழலாமென்ற எண்ணமில்லாமல் வாழ; சுதந்திரமாய் வாழ; வெறெவருடனும் அன்புடன்– அடிமைத்தனமாகவல்ல– சக வாழ்வுவாழ.

உருது மொழியிலே சிறந்த கவியான இக்பால் என்பவர் அச்சமற்ற வாழ்க்கை தேவை என்றார். அது என்ன? அந்நியருக்கு அச்சமற்ற வாழ்க்கை; அறியாமைக்கு, ஆட்சியின் அநியாய சட்ட திட்டங்களுக்கு சமுதாயத்தின் பிற்போக்கான சாதிமதக் கட்டுப்பாடுகளுக்கு அச்சமற்ற வாழ்க்கை என்று விளக்குகிறார். மிகப் பொருத்தமான விளக்கம் இது எங்களுக்கு இன்று கருத்தரங்கிலும் கவியரங்கிலும் இவ்வித பிற்போக்கு அரண்களுக்குத் தகுந்த குண்டுகள் வீசினால், அங்கிருந்து வெளிவரும் விஷவாயுக்கள், நச்சவாடைகள், முடக்கு வாதங்கள் ஒழியும்; ஒழிய வேண்டும்.

இந்தப்பரபரப்பை ஏற்படுத்துவதில் இப்பெரு விழாவின் வெற்றி தங்கியிருக்கிறது.

# "தொழிலாளரின் இழந்த உரிமையை மீட்க நாடு தழுவிய வேலைநிறுத்தம் வேண்டும்!

## அரசுடன் ஒட்டி உறவாடுபவர்களினால் தொழிலாளர் காட்டிக்கொடுக்கப்பட்டனர்"

(யாழ்ப்பாணம்)

"தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளைப் பறித்து தொழிற்சங்கங்களை அழித்து, அந்நிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு நாட்டை ஈடுவைத்து தொழிலாளர்களையும் பாட்டாளிகளையும், விவசாயிகளையும் நாளுக்குநாள் அழித்துவரும் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்திற்கு எதிராக நாடு பரந்தஅளவில் தொழிலாளர்களின் இழந்த உரிமைகளை வென்றெடுக்க பரந்த வேலைநிறுத்தமொன்றை மேற்கொள்ள இந்த நாட்டிலுள்ள தொழிற்சங்கங்களும், இடதுசாரி இயக்கங்களும் முன்வரவேண்டும்."

இவ்வாறு திரு. கே. ஏ. சுப்பிரமணியம் யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) மேதினக்கூட்டத்திற்கு தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. சுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில்கூறியதாவது: உலகத் தொழிலாளர் தினமான மேதினம் கொழும்பு தவிர ஏனையபகுதிகளில், உரிமை மறுக்கப்பட்ட நிலையில், தொழிலாளர் வர்க்கம் தமது அரசுக்கெதிராக போர் முழக்கம் செய்யாமல், மேதின ஊர்வலம் எதுவுமே நடக்காமல் மேதினக்கூட்டத்தை நடாத்துகின்றன. இதுவே தொழிலாளருக்கெதிராக அரசு தொடுத்திருக்கும் பெரிய அடக்குமுறையாகும். அரசுக்கு எதிராக ஆட்சேபனைகளையும், எதிர்ப்புக்களையும் தெரிவிக்க தொழிலாளருக்கு இதுவரை இருந்துவந்த தொழிற்சங்க உரிமைகூட இவ்வருடம் அரசினால் மறுக்கப்பட்டு விட்டது ஊர்வலங்களை அரசாங்கம் தடைசெய்ய அறிவித்தல் கொடுத்தவுடனே அதனை ஆட்சேபித்து தார்மீக ஜனாதிபதிக்கு கண்டனம் தெரிவித்துக் கடிதம் எழுதியது எமது கட்சி. தமிழர் விடுதலைக்கூட்டணியும், தொண்டைமான் காங்கிரசும் இவ்விடயத்தில் மௌனம் சாதித்ததின் மூலம் அவர்களை நம்பியிருக்கும் தொழிலாளிகளைக் காட்டிக்கொடுத்து விட்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணியோ தொண்டைமான் காங்கிரசோ கொழும்பில் மேதினக்கூட்டங்களை நடத்தவில்லை. மேளவாத்தியத்துடனும், நடனத்துடனும் மாபெரிய ஊர்வலத்தை கேளிக்கைகளுடன் கடந்த வருடம் நடத்திய கூட்டணியினர், இவ்வருடம் மக்களுக்கு முகங்கொடுக்கமுடியாமல் யாழ். நகரமட்டபத்திற்குள்ளேயே கூட்டத்தை நடத்துகின்ற நிலைமைக்கு தள்ளப்பட்டுவிட்டது! இவர்களால் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியுமா! என்பதை முடிவு செய்யவேண்டியது. இந்நாட்டு தமிழ் பாட்டாளி மக்களின் கடமையாகும் இன்றைய அரசுக்கும், கூட்டணிக்கும் கிராமங்களில் பல எதிர்ப்புக்கள் தோன்றியுள்ளன என்பதை இவர்கள் உணரத்தொடங்கியுள்ளனர். கிராமத்து இளைஞர்களின் ஆதரவு இவர்களுக்கு இல்லை என்பதை இப்பொழுது உணரத்தொடங்கிவிட்டனர் இந்த அரசுக்கு நாடுமுழுவதிலும் வாழும் சகல பாட்டாளிமக்களினது சிறிமாவோவின் அரசியல் உரிமையை பறித்தும், பாமரமக்களை இராணுவத்தின் மூலம் அடக்கியும், ஆட்சி நடத்த அரசு விரும்புகிறது. இதற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது. கூட்டணி. தேர்தலுக்காகமட்டமல்ல,இந்தநாட்டில் வாழும் பாட்டாளி மக்களின் சீவிய உரிமையை தொழிற்சங்க உரிமையை வென்றெடுக்க ஐக்கியம் அவசியமாகிறது. என்பதை இடதுசாரிகள் மனதில் கொள்ள வேண்டும். ஐக்கியதேசியகட்சி ஆட்சியை இந்நாட்டிலிருந்து அடியோடு நீக்க இடதுசாரி இயக்கங்களின் ஒற்றுமை அவசியமாகிறது' தொழிலாளர் வர்க்கம் இழந்த உரிமைகளைப் பெற, சொழிற்சங்க உரிமைகளைப்பெற, பொருளாதாரத்தில் மேம்பட பொதுக் கொள்கை அடிப்படையில் ஐக்கியம் அமைந்தால் தான் தொழிலாளர்வர்க்கம் மீட்சி பெற முடியும். அரசும், கூட்டணியும் பெலவீனமடைந்து, மக்களால் ஒதுக்கப்படும் இந்த நேரத்தில், நாம் ஐக்கியப்பட்டு ஆட்சியை நீக்கி தொழிலாளி – பாட்டாளி – விவசாயி மக்களின் குறைகளைப்போக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

### தொழிலாளரை அடக்கமுடியாது

சட்டத்தரணி எஸ். தேவராசா பேசுகையில், "உலகில் வாழும் சகல இனமக்களும் உரிமைகளை வென்றெடுக்க இந்த மேதினத்தைக் கொண்டாடுகிறார்கள். பிரதேசம் இனம் என்ற அடிப்படையில் மேதினத்தை கொண்டாடுவது சிறந்ததல்ல. இனரீதியில் வர்க்க பேதத்துடன் மேதினத்தைக் கொண்டாடுவது மேதினத்தைக் கொச்சைப்படுத்துவதாகவே அமையும். மக்கள் அரசாங்கத்திற்கு தமது எதிர்ப்பைத்தெரிவிக்கும் மார்க்கமாக அமைந்த ஊர்வலத்தை அரசு தடைசெய்ததின் மூலம் தொழிலாளர்களை அடக்கிவிட முடியாது. கடந்தவருடத்தைப்போல ஊர்வலத்தை நடத்தமுடியாதகூட்டணி: கோட்டையை விட்டு மண்டபத்தினுள்ளே கூட்டத்தைவைக்கும் அவலநிலைமைக்கு வந்து விட்டது. இவர்களின் வரட்டுக்கொள்கைகளையும் மூரட்டுச்சித்தாத்தங்களையும் மக்கள் இன்று உணரத்தலைப்பட்டுவிட்டனர். இதனால் கூட்டணி வாய்மூடி மௌனியாக இருக்கிறது ஊர்வலத்தை ஏன் தடைசெய்தாய் என்று அரசாங்கத்தைப் பார்த்துக் கேட்க லாயக்கற்ற கூட்டணி; தொழிலாளர்களின் எந்த உரிமையை வென்றெடுக்கப் போகிறது? அவசரகாலச் சட்டத்தை நீக்கி பயங்கரவாதச்சட்டதை அமுல்நடத்தி சாதாரண அப்பாவி மக்களை வாட்டிவதைக்கிறது இன்றைய அரசு; இளைஞர்களையும், வாலிபர்களையும் பயங்கரவாதிகள் என்று கூறிக்கைதுசெய்து பிணையில் விடாமல் நீதிமன்றத்தில் கொண்டுவந்து நிறுத்தாமல் வாட்டி வதைக்கிறது. சிறிமாவோவின் ஆட்சியில் கறுப்புக்கொடி காட்டி பேராட்ட வீரர்களாக விளங்கிய கூட்டணியினர், தொழிலாளர்களையும் பாட்டாளிகளையும், பாமரமக்களையும் கொன்றுகுவிக்கும் அரசுடன் அகிம்சா மூர்த்திகளாகி வாய்மூடி மௌனிகளாக இருக்கிறார்கள். அன்று உத்தியோக பூர்வமாக விஜயம் செய்த மந்திரிகளுக்குக் கறுப்புக்கொடி காட்டியவர்கள் தமிழினத்தையே பூண்டோடு அளிக்கும் சரித்திரத்தைக்காட்டும் அரசு தார்மீகம் பேசுவதுடன் வடக்குக்குவரும் அமைச்சர்களுக்கு விருந்துபசாரம் வைத்து மகிழ்கின்றனர். மக்களுக்கு விடுதலைதான் அவசியமாகிறது இது என்ன வகையில் வந்தாலும் விடுதலையை மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்" என்று கூறினார்.

இந்த நாட்டில் அரசினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் சுற்றுலாவிற்குச் செல்பவர்கள் கண்டு களிக்கும் அபிவிருத்திகளாக இருக்கின்றனவே தவிர நாட்டின் வளத்தை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் அபிவிருத்திகளாக அமையவில்லை, அரசினால் கூட்டணியினரை சமாதானப்படுத்த வழங்கப்பட்ட அபிவிருத்தி சபை இன்று வடபிரதேச அபிவிருத்தியை விடுத்து சங்லித் தோப்பை விருத்தி செய்து ஆண்ட இனம் மீண்டும் சங்கிலியன் ஆண்ட இடத்தில் இருந்து செங்கோல் பிடித்து ஆட்சி செய்ய முயற்சி செய்து வருகிறது அரசு தென்னிலங்கையில் அபிவிருத்தி என்று கூறி பாமர மக்களை ஏமாற்ற கூட்டணியினர் சங்கிலித் தோப்பை அபிவிருத்தி செய்து வட இலங்கை மக்களை திசை திருப்புகிறது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

திரு. கே. செந்திவேல் பேசுகையில் "அடுத்த தேர்தலில் மக்களின் வாக்கைப் பெற்று ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியை மீண்டும் அமைக்க தார்மீக ஜனாதிபதி ஜே. ஆரும் பிரதமர் பிரேமதாசாவும் கொழும்பு காலிமுகத்திடலில் நடக்கும் மேதினக் கூட்டத்திற்குப் கால்நடையாகப் போகிறார்கள் விவசாயிகள், தொழிலாளர்களின் வாயிலடித்து அவர்களின் வாழ்க்கையை அழித்து தம்மையும் தம்மைச் சேர்ந்தவர்களையும் வாழவைக்க மேதினம் எடுக்கிறார்கள். இந்த நாட்டில் வாழுகின்ற பாமர மக்களை நசுக்க எத்தனையோ சட்டங்களை நிறைவேற்ற 52 வருடங்கள் நிலைக்களமாக விளங்கிய பாராளுமன்றத்தை விடுத்து சிங்கள இராசதானியாக விளங்கிய கோட்டையில் புதியபாராளுமன்றத்தை அமைத்து குடியேறியிருக்கிறார் ஜே. ஆர். ஆனால் அதே நேரத்தில் இறுதித்தமிழ் மன்னன் சங்கிலியன் ஆண்ட சங்கிலித் தோப்பை மீண்டும் புணரமைக்க அபிவிருத்திச் சபைக்கு அதிகாரம் தரும்படி கேட்கிறார் கூட்டணித்தலைவர். இவைகள் மூலம் இவர்கள் பாட்டாளி தொழிலாளி விவசாய மக்களில் எதுவித கரிசனையும் இல்லாதவர் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் மோசமான பணவீக்கம், விலைவாசி உயர்வு

(6ம் பக்கம் பார்க்க)

## செயல்திட்ட போட்டியில் முதலிடம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை சர்வசன வாக்குரிமை கிடைக்கப்பெற்று 50வது ஆண்டு நிறைவு பொன்விழாவையொட்டி கல்வி அமைச்சு பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து அகில இலங்கை ரீதியிலான பாடசாலைகளுக்கிடையே நடத்திய செயல்திட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரபாடசாலை மாணவியான செல்வி. பர்ஹானு ப்ரதவ்ஸ் என்பவர் முதலாம் இடத்தைப்பெற்றுள்ளார்.

க. பொ. த. உயர்தரம் வர்த்தக பிரிவு இறுதியாண்டு மாணவியான இவர் தனக்குரிய முதலாம் பரிசான ஐயாயிரம் ரூபாவை அண்மையில் கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நடைபெற்ற பொன்விழா கொண்டாட்டப் பரிசளிப்பு வைபவத்தில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடமிருந்து பெற்றுக்கொண்டார், (உ)

# போக்லண்ட் யுத்தம் நீடிக்கிறது

# ஆர்ஜென்டீனா எதிர்த்தாக்குதல்!

லண்டன், மே 2

**போக்லண்ட்தீவுகளின் தலைநகரான போட்ஸ் ரான்லியின் விமானத் தளம் மீது பிரிட்டிஷ் யுத்த விமானங்களான 'வல்கன்', கரியர்' ஆகியவை குண்டுமாரி பொழிந்தன.**

விமானத்தளத்தில் குழிகளை ஏற்படுத்தி, விமான ஓடு பாதையை நாசத்திற்குள்ளாக்கிய பிரிட்டிஷ் போர் விமானங்கள், தங்கள் இருப்பிடங்களுக்குப் பாதுகாப்பாகத் திரும்பிவிட்டன என்று பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆர்ஜென்டீனா யுத்த விமானங்கள் போக்லண்ட் தீவுகளுக்கு செல்வதைத் தடுக்கவும், போக்லண்ட்தீவிலிருக்கும் இராணுவ வீரர்களுக்கு ஆர்ஜென்டீனாவிலிருந்து உணவு, ஆயுதங்கள் செல்வதைத் தடுப்பதற்காகவும், அங்கு நிலைகொண்டிருந்த இராணுவ வீரர்களை பின்வாங்கச்செய்வதற்காகவுமே இத்தாக்குதலை பிரிட்டிஷ் யுத்த விமானங்கள் மேற்கொண்டன என்று அறிவிக்கப்பட்டன,

இதே நேரத்தில் இத்தாக்குதலின் போது பிரிட்டிஷ் 2 'கரியர்' யுத்த விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் ஒரு விமானி கைதுசெய்யப்பட்டதாகவும் யுத்தக் கப்பலொன்று தாக்கப்பட்டதாகவும் ஆர்ஜென்டீனா பாதுகாப்புஅமைச்சு தெரிவித்ததை பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது.

இத்தாக்குதல் குறித்து ஆர்ஜென்டீனா ஐ. நா. விடம் முறையிட்டுள்ளது.

இரண்டுஆர்ஜென்டீனாயுத்த விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாகவும் பல விமானங்கள் நாசப்படுத்தப்பட்டதாகவும் பிரிட்டிஷ் கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில் போர் பற்றிய செய்தி முன்னுக்குப் பின் முரணாக வெளிவருவதாக அமெரிக்க ஜனாதிபதி றீகன் தெரிவித்துள்ளார்

காலனியமுறையைத் திரும்ப ஏற்படுத்த பிரிட்டன் முனைகிறதென சோவியத் குற்றம் சாட்டியுள்ளது. (கு

## அரசியல் கட்சிகளுக்கு தடை

புதுடில்லி, மே 2

பஞ்சாப்பில் இரண்டு அரசியல் கட்சிகளுக்கு மத்திய அரசு தடைவிதித்துள்ளது.

இவ்விரண்டு கட்சிகளும் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையன என்று பஞ்சாப் மாநில அரசு தெரிவித்த புகாரையடுத்து சட்டவிரோத தடைச்சட்டத்தின்கீழ் இக் கட்சிகளுக்கு மத்திய அரசு நேற்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த ஆண்டு நடுப்பகுதியில் இந்திய விமானமொன்று பாகிஸ்தானுக்கு திசைதிருப்பப்பட்டதற்கும், அமெரிக்காவில் இரண்டு ஆலயங்களை மாசுபடுத்தியதற்கும் மேற்படி இரண்டு கட்சிகளுமே பொறுப்பெடுத்துக்கொண்டது தெரிந்ததே. (கு)

## சிங்கை அரசு இந்தியர்களை கரையிறங்க அனுமதித்தது

புதுடில்லி, மே. 2

சிதம்பரம் கப்பலில்சென்னையிலிருந்து சிங்கப்பூர் சென்ற 300 பிரயாணிகளும் கரையிறங்க சிங்கப்பூர் குடியேற்ற குடியகல்வு இலாக அனுமதியளித்துள்ளது,

சிங்கப்பூரிலுள்ள இந்தியத் தூதுவர் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்தே இவர்கள் கரையிறங்க சிங்கப்பூர் அரசு அனுமதித்தது.

சுற்றுலா என்ற பெயரில் சிங்கப்பூர் சென்று களவாக வேலை கொள்பவர்கள் மீதுசிங்கப்பூர் அரசு கடும்நடவடிக்கை எடுத்துள்ளது. (கு)

### அமெரிக்க-சோவியத் ஜனாதிபதிகள் சந்திப்பு:

# 3-வது நாட்டில் தாமதமின்றி நடைபெறவேண்டும்

### பிரஷ்நேவ் கருத்து

மாஸ்கோ, மே 2

''அமெரிக்க ஜனாதிபதி—சோவியத் ஜனாதிபதி சந்திப்புக் குறித்து அமெரிக்க ஜனாதிபதி றீகன் வெளியிட்டுள்ள கருத்து தெளிவற்றதாக உள்ளது'' என்று சோவியத் ஜனாதிபதி பிரஷ்நேவ் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மகாநாட்டில் நிருபர் ஒருவர், ''அமெரிக்க ஜனாதிபதி ரொனல்ட் றீகன் பத்திரிகை பேட்டி ஒன்றில், உங்களை அவர் நியூயோர்க்கில் சந்திப்பதற்கான சாத்தியப்பாடு பற்றிக்கூறினர். இது பற்றி ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் வெளிவருகின்றன. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?'' என்று சோவியத் ஜனாதிபதியைக் கேட்டபோது ''உண்மையில் அமெரிக்க ஜனாதிபதியின் அறிக்கை தெளிவற்றதாகத்தான் உள்ளது'' என்று பிரெஷ்நேவ் கூறினர்.

''இவ்விஷயத்தின் சாராம்சத்தைப் பொறுத்தவரையில், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது காங்கிரசில் நான் முன்வைத்த அறிக்கையில், அமெரிக்காவுடன் எல்லா மட்டங்களிலும் தீவிர பேச்சு வார்த்தைகள் நடத்துவதன் பயனைப் பற்றிக் கூறினேன். குறிப்பாக உச்சகட்டப் பேச்சு வார்த்தைகள் அறுதியான முக்கியத்துவம் வாய்ந்தவை என்று வலியுறுத்தினேன்; அத்தகைய பேச்சுவார்த்தைகளை இப்பொழுதும் நாம் ஆதரிக்கின்றோம். அமெரிக்க ஜனாதிபதிக்கும் எனக்குமிடையேயான பேச்சுக்கள், சிறந்த முன்னேற்பாடுகளுக்குப் பின்னர் ஆக்கபூர்வமான முறையில் நடைபெறவேண்டும். ஏதாவது ஒரு சர்வதேச அரங்கத்தில் தற்செயலான முறையில் சந்தித்துப் பயனில்லை, இதனைத் திட்டவட்டமாகச் சொல்வதானல், உலக விவகாரங்களில் நம்நாடுகளின் உன்னத பொறுப்புக்களுக்கு ஏற்ப, இத்தகைய சோவியத்—அமெரிக்க உச்சக் கட்ட சந்திப்பை நாம் ஆதரிக்கின்றோம்; அதன் மீது வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையை அதுநியாயப் படுத்தும். பின்லாந்து அல்லது சுவிட்சலாந்து போன்ற ஏதாவது ஒரு மூன்றாவது நாட்டில், அந்நாட்டின் சம்மதத்துடன் இந்தஉச்சக்கட்ட மாநாட்டை தாமதமின்றி நடத்தலாம். என்று ஜனாதிபதி பிரெஷ்னேவ் தெரிவித்தார்.

### நல்லூரில்

# தமிழகப் பாடகியின் பண்ணிசை விருந்து

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தின் புகழ்பெற்ற பண்ணிசைப் பாடகியான திருமதி ஜானகி சுவாமிநாதரின் பண்ணிசை நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில் இடம் பெறவிருக்கிறது,

உலக இந்து மாநாட்டில் பண்ணிசை விருந்தளிப்பதற்காகக் கொழும்பு வந்திருந்த திருமதி. ஜானகியின் பண்ணிசை நிகழ்ச்சி யாழ்ப்பாணத்திலும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை யாழ் திவ்யஜீவன சங்கம் செய்துள்ளது.

இம்மாதம் 4ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை நல்லூரிலுள்ள திவ்யஜீவன சங்க மண்டபத்தில் திருமதி. ஜானகியின் பண்ணிசைக் கச்சேரி இடம் பெறும்.

## டிக்கட் பரிசோதனையில் சிக்கிய தங்கக் கட்டி!

சென்னை. மே. 2

ஒரு பஸ்ஸை டிக்கட் பரிசோதகர்கள் சோதனையிட்ட போது 4 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கக்கட்டி சிக்கிக் கொண்டது,

சென்னையிலிருந்து கோயம்புத்தூர் சென்ற பஸ்ஸில்தான் இச்சம்பவம் நிகழ்ந்தது.

இத்தங்கக்கட்டியை வைத்திருந்த பிரயாணி வட இந்தியர் போல் காணப்பட்டார். இந்நபர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (கு)

## சினிமா செய்திகளுக்கே பத்திரிகைகள் முக்கியத்துவம்

### பொன்விழாவில் அமைச்சர் கவலை

சென்னை. மே, 2

''பத்திரிகைகள் செய்திகளை வெளியிடும் போதுபரபரப்பை யேற்படுத்தாது கவனமாக இருக்கவேண்டும்'' என்று இந்திய பாதுகாப்பமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் 'கலைமகள்' சஞ்சிகையின் பொன் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் ''பத்திரிகைகள் சஞ்சிகைகள் பொதுமக்களைப் பற்றி சிந்தித்து செய்திகளை உண்மையாக வெளியிட வேண்டும். சினிமாபற்றிய செய்திகளுக்கே பத்திரிகைகள் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. நாட்டு அபிவிருத்திபற்றியும், மதுவிலக்கல்கொள்கை பற்றியும் விளக்கும் சிறுகதைகளைபத்திரிகைகள் வெளியிடுவதன் மூலம் நாட்டுக்கு நல்ல பயனுள்ள சேவை செய்வதாக அமையும்.'' என்றார், (கு)

## "ஒற்றுமையும் கட்டுப்பாடும் சீர்குலைந்தால் இலட்சிய ஈடேற்றம் தடைப்படும்"

- 'ஆலால்' -

(நல்லூர்)

''எந்த இயக்கமானலும் திட்டமிட்ட செயற்பாட்டின் மூலம் பிரச்னைகளைத் தீர்க்க முயலவேண்டும். ஒற்றுமையும் கட்டுப்பாடும் சீர்குலைந்தால் இலட்சிய ஈடேற்றம் தடைப்பட்டுவிடும்''.

இவ்வாறு நேற்று நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஆதரவிலான தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியினது மேதின விழாவிற்குத் தலைமை தாங்கி உரைநிகழ்த்திய கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரம் கூறினர்.

அவர் தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது: உலக வரலாற்றில் ஒற்றுமைமூலம் உரிமைகளைப் பெற்றெடுக்கலாம் என்பதை நிலைநிறுத்திய நாள் மேதினம். அதே நேரத்தில் உழைப்பவர்களின் உரிமைகளை மற்றையோர் மதிக்க வேண்டும் என்பதைப் பிரகடனப்படுத்தியதினம் மேதினம். உலகத் தொழிலாளர்களின் பிரச்னைகள் அந்த அந்தநாட்டு சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறுபட்டிருக்கிறது. அத்தகைய பிரச்னைகளை சூழ்நிலைக்கு ஏற்றவாறு அணுகித் தீர்க்க வேண்டியது அவசியம்.

எமது நாட்டுத் தமிழ்பேசும் தொழிலாளர்களின் பிரச்னைகளை பிற தொழிலாளர்களின் பிரச்னைகளைவிட மாறுபட்டவை என்பதை மறுக்க முடியாது. இன, மொழி, பிரதேச ரீதியாக எமது தமிழ் இனம் பல துன்பங்களுக்கும், இடையூறுகளுக்கும் உட்படுத்தப்பட்ட வரலாறு இந்த நாட்டுத் தமிழ்பேசும் தொழிலாளர்களின் தனித்துவமான வரலாறு. சிங்களத் தேர்ச்சியின்மையால் சம்பள உயர்வு, பதவி உயர்வு, பதவி முதலியவற்றை தமிழ்பேசும் தொழிலாளர்கள் மட்டும்தான் இழந்திருக்கிறார்கள். வெளித்தோற்றத்திற்கு இவை தொழிலாளர் பிரச்னையாக தோன்றினாலும் அது அடிப்படையில் ஒரு இனப் பிரச்னை. இன விடுதலையே இந்தப் பிரச்னைகளுக்கான ஒரே தீர்வு.

தமிழ் பேசும் தொழிலாளர்கள் மொழிவழியாக இணைந்து தமதுஉரிமைகளைப் பெறுவதற்காக இயங்கவேண்டியது இன்றைய காலகட்டத்தில்தவிர்க்க முடியாதது எந்த இயக்கமானாலும், திட்மிட்டசெயற்பாட்டின் மூலம் பிரச்னைகளைத் தீர்க்க முன்வரவேண்டும். ஒற்றுமையும் கட்டுப்பாடும் சீர்குலைந்தால் அதன் விளைவு இலட்சிய ஈடேற்றம் தடைப்படுவதாகும்.

## தவிட்டிலிருந்து எண்ணெய்

கோயம்புத்தூர், மே 2

அரிசித்தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆராய்ச்சியில் கோயம்புத்தூரில் உள்ள தமிழ் நாடு விவசாய ஆராய்ச்சி நிலையம் வெற்றிகண்டுள்ளது.

இவ்எண்ணெய் தரமானது என்றும் முதலீடு குறைவானது என்றும் ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. (கு)

## சமாதான நீதவான்

(மட்டுவிலில்)

அல்லாரை தெற்கைச் சேர்ந்த திரு. சி. கிருஷ்ண பிள்ளை அல்லாரைப் பகுதி சமாதான நீதவானுக, நீதி அமைச்சினல் நியமிக்கப்பட்டுள்ளார். திரு. கிருஷ்ண பிள்ளை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனப் எம். எச். காரியப்பர் முன்னிலையில் சமாதான நீதவானுக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பரந்தன் வேலைநிறுத்தம்

# முன்னூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் கஷ்டம்

## உதவிவழங்க கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

''பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் கடந்த ஐந்து தினங்களாக தொடர்ந்து நடைபெற்றுவரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள 300 க்கு மேற்பட்ட குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இக் குடும்பங்களின் கஷ்டத்தை போக்குவதற்குப் பொதுமக்களும். சமூகசேவை நிறுவனங்களும், தொண்டர் ஸ்தாபனங்களும் முன்வர வேண்டும்'' இவ்வாறு கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

மேற்படி வேலை நிறுத்தம் பற்றி இயக்கத்தின் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அடுத்து இயக்க செயலாளர் திரு. அ. ம. புவனேஸ்வரன் இந்தஅறிக்கையை வெளியிட்டுள்ளார்.

விலைவாசிகள் உயர்ந்துள்ள இக்காலத்தில் போதிய வருமானம் எதுவுமின்றி இந்தவேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் குடும்பங்கள் மிகவும் அல்லல்படுகின்றன. இவ்வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறும் பட்சத்தில் சில வேளை இத்தொழிற்சாலையை அரசாங்கம் மூடிவிடவேண்டிய நிலையும் ஏற்படலாம். தொழிற்சாலை நிர்வாகம் தொழிற்சங்கங்களின் நியாயமான கோரிக்கைகளை உதாசீனம்செய்துவரும் இந்நிலையில் அரசாங்கம் இதில் தலையிட்டு தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வுகாண வேண்டியது அவசியமாகும். அத்துடன் இந்தவேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய தொழிற்சங்கங்களும் நலன்விரும்பிகளும் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க வேண்டும்.',

(கொழும்பு)

உலக இந்து மகாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகை தந்திருந்த திருமுருக கிருபானந்த வாருயாரிக்கு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி தேவஸ்தான திருஞானசம்பந்த கான சபாவில், திருமுறைச் செம்மல் வே. அண்ணாமலை திருவடி பாத பூசையை சிறப்பாக நடத்தினர்கள். திருமுருக கிருபானந்தவாரியாரிடம் திரு. வே. அண்ணாமலை, திரு. வி. ரி. வி. தெய்வநாயகம்பிள்ளை, அகில இலங்கை திருமுறை மன்ற அமைப்பாளர் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி, வேலணை மேற்கு இந்து இளைஞர் பேரவை செயலாளர் ப. பால சுப்பிரமணியம் ஆகியோர் அருளாசி பெற்றனர்.

# பயங்கரவாதிகளை.கைதுசெய்ய 17 லட்சம் ரூபா வெகுமதி!

(கொழும்பு)

வடபகுதியில் பயங்கரவாத இயக்கங்களில் ஈடுபட்டுத் தேடப்படும் முக்கிய நபர்களை கைது செய்ய, பாதுகாப்பு அமைச்சு 17 லட்சம் ரூபாவை வெகுமதியாக வழங்க முன் வந்துள்ளது.

பயங்கரவாத இயக்கத் தலைவர்கள் என்று வர்ணிக்கப்படும் மூவரை கைதுசெய்ய உதவுபவர்களுக்கு தலா 3 லட்சம் ரூபாவும் ஏனைய 16 பயங்கரவாதிகளை கைதுசெய்ய உதவுபவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

19 பயங்கர வாதிகளின் புகைப்படங்களும் அவர்களது பெயர்களும் சுவரொட்டிகளில் அரசாங்க அச்சகத்தால் அச்சடிக்கப்பட்டு வருகின்றன. நாடு பூராவும் பொது இடங்களில் இவைஒட்டப்படும் என்றும் பாதுகாப்புஅமைச்சு தெரிவித்துள்ளது.

பிரபாகரன், உமாமகேஸ்வரன் ஆகிய இரு பிரிவினரும் பகைகாரணமாக ஒருவரையொருவர் காட்டிக்கொடுக்கத் தொடங்கிவிட்டனராம்.

(6ம் பக்கம் பார்க்க)


## லங்கா சீமெந்து லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் சபை, பங்கு வழங்குகையின் முடிவு தேதியை 1982 மே 31ம் தேதிவரை நீடித்துள்ளது




# மக்கள் பெருமளவில் பங்குபற்றுவதற்காக

இந்தத் திட்டத்தில், பரந்த அடிப்படையில் பலரும் பங்கு பற்றி, பங்குகள் பரவலாக விநியோகம் செய்யப்படுவதை உறுதிப்படுத்தவே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

முதல் ஆண்டிலேயே 30சதவீத பங்கிலாபம் பெறக்கூடிய நல்ல வாய்ப்பிருக்கும் இத்திட்டத்தில் இதுவரை நீங்கள் பங்குகளைப் பெறுதிருந்தால், இதுவே உங்களுக்குக் கிடைக்கும் கடைசிச் சந்தர்ப்பமாகும்.

உங்கள் பங்குத்தரகர், வங்கி முகாமையாளர், கொழும்பு 3, காலிவீதி, 411ம் இலக்கத்திலுள்ள இலங்கை வங்கியின் நிர்வாக ஆலோசனைப் பிரிவு அல்லது நேரடியாக எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

முற்பகர்வின் பிரதிகளும் விண்ணப்பப் படிவங்களும் வெளியூர்களிலுள்ள எல்லா இலங்கைவங்கி, மக்கள் வங்கி கிளைகளிலும் கிடைக்கும்.

**லங்கா சீமெந்து லிமிட்டெட்**
அல் மனார் கட்டிடம், 302, காலி வீதி, கொழும்பு-4.
தொலைபேசி: 589126

லங்கா சீமெந்தில் சேர்ந்து உறுதியான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புங்கள்


## முஸ்லிம் நாடுகளுடன் துருக்கி வர்த்தக உறவு

பேரூட், மே 2

பரஸ்பரம், பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்தி, அபிவிருத்திசெய்ய, பல மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகள் முயற்சித்துவருகின்றன. இதில் துருக்கி சம்பந்தப்பட்டிருப்பது புதியதோர் அம்சம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இஸ்தான்பூலில்நடைபெற்ற பொருளாதார புனரமைப்பு நிதியத்தின் கூட்டத்தில் துருக்கி வெளிநாட்டமைச்சர் இல்தர் துர்க்மன் பேசுகையில்; துருக்கிநாடு முஸ்லிம் நாடுகளுக்குசெய்யும் ஏற்றுமதியின் பரிமாணம் அதன் மேற்கு ஐரோப்பிய ஏற்றுமதிக்கு சமமான நிலைக்கு வந்துவிட்டதாகக் கூறினர்.

''மேற்கு ஐரோப்பாவை மாத்திரம் நம்பியிருப்பதை கைவிட்டு, வர்த்தகத்தை பலமுகப்படுத்த துருக்கி முயற்சிப்பதற்கு காரணங்கள் உண்டு என்று தெரிவித்தஅவர்: இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய கட்டத்தில் மேற்கை மாத்திரமே துருக்கி நம்பியிருந்தது. 1963ல் ஐரோப்பிய பொதுச் சந்தையில் கூட்டு அங்கத்துவமும் பெற்றது. இதுதுருக்கியின் பொருளாதார அபிவிருத்திக்கு உத்வேகம் பாய்ச்சக்கூடுமென்று நம்பப்படுகிறது'' என்று கூறினர்.

## வீடியோ மூலம் தமிழ் திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

'வீடியோ' மூலமாக யாழ்ப்பாணத்தில் தமிழ்ப்படமொன்று தயாரிக்கப்படவிருக்கிறது சுமார் இரண்டரைமணி நேரம் பார்க்கக்கூடியதாக அமையவிருக்கும் இத் தமிழ் படத்தின் வெளிப்புறக்காட்சிகள், வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. நிலாபுரடக்ஷன்ஸ் தயாரிக்கும் இப்படத்தில் பதினைந்து நடிகர், நடிகைகள் இடம்பெறுவார்கள்.

## ★ வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட 40 ஆயிரம் தொழிலாளர்களை

# இந்த அரசாங்கம் வீதியில் விட்டது

### மேதின விழாவில் கூட்டணித் தலைவர்

''தமிழ் இளைஞர்கள் துப்பாக்கியால் தமது பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியாது. ஒற்றுமையும் கட்டுச்கோப்பும் தான் நமது பிரச்னைகளுக்கு ஒரே வழி''.

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற மண்டபத்தில் கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரம் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியும் இணைந்து நடத்திய மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் கூறினார்.

அவர் தொடர்ந்து தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''19ம் நூற்றுண்டில் சிக்காக்கோ நகரத் தொழிலாளர்கள் செய்த தியாகத்தின் சின்னமே மேதினமாகும். அன்று உரிமைக்காகப் போராடிய தொழிலாளர்களே இன்று ஆட்சி புரியும் நிலைக்கு உயர்த்தப்பட்டார்கள். அதன்தொடராக இலங்கையிலும் தொழிலாளர்கள் உரிமைகளைப் பெற்றார்கள். ஆனால் அவற்றை இன்று அவர்கள் இழந்து வருகின்றார்கள். பல்லாண்டுகளாக நாம் மேதினத்தில் நடாத்திய ஊர்வலத்திற்குக் கூடத் தடை விதித்துள்ளது இன்றைய அரசு. தொழிலாளர்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க சட்ட ரீதியான ஒரு ஆயுதமே வேலை நிறுத்தமாகும். ஆனால் இந்த அரசு பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட நாற்பதாயிரம் தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்து அவர்களை வேலையற்றவர்களாக வீதியில் தூக்கி எறிந்துவிட்டது. வாழ்க்கைச் செலவு காலத்திற்குக்காலம் உயர்ந்து வருகிறது சம்பள உயர்வு கூட இந்த நாட்டில் ஒருபகுதியினருக்கே கிடைக்கின்றது.

## "எல்லாவற்றையும் இழந்தோம் எஞ்சிய உயிரை இழக்கவும் தயார்"

- மங்கையர்க்கரசி -

### சிங்களவருக்காகவும் நாம் குரல் கொடுக்கின்றோம்

இந்த நாட்டின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாகத் திகழும் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு இல்லை. தன் உதிரத்தை உரமாக்கி உழைத்துவரும் உண்மைத் தொழிலாளிக்குஉரிமையும், சம்பள உயர்வும் இல்லை. காரணம் அவன் தமிழன். இந்தத் தொழிலாளர்களின் உரிமைக்குக் குரல் கொடுப்பது மட்டுமல்ல; நம்மிடம் உதவி கோரிநிற்கும் சிங்கள தொழிற்சங்கங்களுக்கும் கூட நாம் குரல் கொடுக்க வேண்டியுள்ளது. கடந்த நாலரை ஆண்டுகளில் நாம் எத்தனை பிரச்னைகளை எதிர் கொண்டோம். சிங்கள மக்களுடைய பிரச்னைகளாயினும் நியாயமானவற்றுக்கு எப்பொழுதும் நாம் செவிமடுத்தே வந்திருக்கின்றோம். நாற்பதாயிரம் தொழிலாளர்களின் வேலை இல்லாப் பிரச்னை என்றாலும்சரி, சிமெந்துத் தொழிற்சாலைப் பிரச்னை என்றாலும்சரி, சோமசேகரா கொலை செய்யப்பட்ட சம்பவத்திலும்சரி நம்மைத் தலையிடுமாறு கோரி சிங்களத்தலைவர்கள் எம்மை வந்து கேட்டிருக்கிறார்கள்.

### 29ம் திகதி பாராளுமன்றத்தில் நாம் பேசியது என்ன?

நாம் 29ம் திகதி பாராளுமன்றம் சென்றதைப் பற்றிப் பலர் பலவாறு பேசிக்கொள்கிறார்கள். நாம் அங்கு என்ன பேசினோம் என்பதை நமது மக்கள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். இரண்டு விஷயங்களை நாம்அவர்களுக்கு வலியுறுத்தினோம். அவர்கள் அந்நியராட்சியில் அடிமைப்பட்டபோது நாமும் அடிமைப்பட்டோம்; ஆனால் அவர்கள் சுதந்திரம் பெற்றுவிட்டார்கள். நாம் தொடர்ந்தும் அடிமைகளாகவே இருந்து வருகின்றோம் என்பதைச் சுட்டிக்காட்டியமை ஒன்று.

(நமது நிருபர்
க. தி. ரவீந்திரன்)

இரண்டாவது அவர்கள் தங்கள் பழைய ராஜதானிச்கு செல்கிறார்சள். எனவே எங்களையும் எங்கள் பழைய ராஜதானிக்கு செல்லவிட வேண்டும் என்று கூறியது.

### அன்புக்கு மட்டுமே கட்டுப்படுவோம்

பழைய கொழும்புப் பாராளுமன்றத்தில் எமது முன்னைய தலைவர்களும் நாமும் எவ்வாறு எமது இனத்துக்காகக் குரல் கொடுத்தோமோ அதேபோன்றுதான் கோட்டே பாராளுமன்றத்திலும் நாம் குரல் கொடுப்போம். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை மட்டும் வலியுறுத்துவேன். நாம் அங்கு உரையாற்றிய போது அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ் நம்மைக் குறை கூறுவதைப்போன்று, ஒரு விஷயத்தை நினைவுபடுத்தினர்.

தங்களுக்கிடையே எந்தவொருவருக்கும் கோவில்களை வழிபடத் தடை கிடையாது என்றும். ஆனால் தமிழ்ப் பகுதிகளில் ஒரு சாராருக்குஇன்று கூடக் கோவில்களில் வழிபட உரிமை கிடையாது என்றும் அவர் சொன்னார். சாதியைச் சாகடிப்பதற்காகப் பலவற்றைச் சாதித்தவர்கள் நாம். எம்மத்தியில் இந்த வேற்றுமை இருக்கக்கூடாது. எந்தவேற்றுமைகளுக்கும் நாம் இடமளிக்கக் கூடாது. ஒரு எம் பி யின் ஜீப்பை நொறுக்குவதாலோ துப்பாக்கியயைநீட்டுவதாலோ நாம் பயந்துவிட மாட்டோம். துப்பாக்கி ஏந்திய குட்டிமணியின் வழக்கில் நான் வாதாடுகின்றபோது யன்னல்கள், கதவுகளுக்கு அப்பால் எத்தனை துப்பாக்கிகள் நீட்டியவண்ணமிருக்கின்றன. எனவே தம்பிகள் துப்பாக்கிகளுககு அல்ல அன்புக்கு மாத்திரமே நாம் கட்டுப்படுவோம்.

''நாம் நமக்குஎதுசரி எனத் தோன்றுகிறதோ அதை செய்வதில் பின்னிற்கமாட்டோம்.

''சென்றஆண்டு ஜூன்ஜூலை மாதங்களில் நடந்த இன்னல்கள் இனிமேலும் நடவாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே பேச்சுவார்த்தைகளை நடாத்தினோம். நமது மக்களைக் காப்பதற்காக ஊர் காவல் படைகளை வேண்டினோம் அதில் நமது இளைஞர்கள் சேர்ந்து கொள்ள வேண்டும் அதைப்போலவே அபிவிருத்திசபைகளை நாம் ஏற்றுக் கொண்டோம். இவற்றின் மூலம் பணத்தையும் அதிகாரத்தையும் பகிர்ந்து கொடுங்கள் என்று தான் கேட்டோம். எதையும் நாம் விட்டுக் கொடுக்கவில்லை.

### ஒற்றுமையை உருவாக்கிறோம்

''கடந்த காலங்களில்தந்தை செல்வா திரு. பொன்னம்பலம் என்று பிரிந்து நின்ற தமிழ் இனத்தைப் பிரிவினைகளை மறந்து ஒன்றுபட்ட ஓர் அணியை உருவாக்கிறோம். இந்த அணியின் ஒற்றுமையைச் சிதறடித்துவிடலாம் எனச்சிலர் கருதுகிறார்கள். இவர்களுக்கு எதிராக நாம் எமது ஒற்றுமையையும் கட்டுக்கோப்பையும் தளரவிடாது செயற்பட கடந்த காலத்தில் எமக்குதந்த ஒத்துழைப்பைத் தொடர்ந்துதாருங்கள்'' என்றார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது: ''எமக்கு எதிராகச் சிலர் பொய்யான வதந்திகளைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். நாம் என்னத்தைச் சாதித்து விட்டோம் என்றும் தாங்கள் தான் தியாகிகள் என்றும் தம்மைத்தாமே போற்றிக் கொள்கின்றவர்கள் எத்தனை தடவைகள் சிறை சென்றார்கள்? நான் இரண்டு தடவைகள் சிறை சென்றேன். எனது குழந்தைகளுக்கு ஒரு வயதும், மூன்று வயதுமாக இருந்த காலத்திலேயே நான் சிறை சென்றவள் அதுமட்டுமா? எமது மண வாழ்க்கை 17 வயதிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரை நானும் எமது குடும்பமும் இழந்தவை எத்தனை எத்தனை எமது குழந்தைகளைக் கூட நாம் காணமுடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றோம். நமது தலைவர்கள் தமது வாழ்க்கையின் பெரும்பகுதியை இந்த இயக்கத்திற்காகவே செலவிட்டவர்கள். தலைவர் திரு. சிவசிதம்பரம் இன்று தளர்ந்து இருக்சின்றார். கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் இருக்கும் நமது தம்பிமார்களின் வழக்குகளில் எல்லாம் தம் வாதத்திறமையால் வாதாடிக் கொண்டிருக்கும் அவர், இந்த வழக்குகளுக்காக எத்தனை இரவுகள் கண் விழித்து ஆயத்தங்கள் செய்வார் என்பதை இவர்கள் அறிவார்களா? நாம் இதுவரை சொத்தைச் சுகத்தை எல்லாம் இழந்தோம். இனி எம்மிடம் மிஞ்சியிருப்பது எமது உயிர்மட்டும்தான். அதைக் கூட இந்த இயக்கத்திற்காக எப்போதும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன்'' என்றார்.

தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு.மகாசிவம் பேசுகையில் கூறியதாவது;

### அதிவிசேஷ அதிபர் பதவி

''சட்ட ரீதியான வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்து அவர்களை வேலையிலிருந்து விரட்டியிருக்கின்றது இந்த அரசு. இவர்களுக்காகக் குரல் கொடுத்த தொழிற்சங்கங்களுக்குஅரசு சொன்னபதில் 'நாம் யாரையும் வேலையில் இருந்து விலக்கவில்லை. அவர்கள் தாமகவே வேலையிலிருந்து விலகியவர்கள்' என்பது தான். இதுபற்றி நாம் சர்வதேச சபைகளிடம் தெரிவித்துள்ளோம். வேலை நிறுத்தத்தின் போது வேலை இழந்தவர்களுக்கு வேலை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

''இன்று ஆசிரியர்கள்பற்றாக்குறை தமிழ் மாணவ உலகிற்கு மிகமோசமான பிரச்னை இந்த நாட்டின் தார்மீக அரசு என்று தன்னைக் கூறிக்கொள்ளும் அரசு அண்மையில் அதிவிசேஷ அதிபர்கள் என்ற பதவி உயர்வுகளை வழங்கியது. இதில் 14 சிங்கள அதிபர்களும் ஒரு முஸ்லீம் அதிபருமே தெரிவு செய்யப்பட்டனர். ஒரு தமிழ் அதிபராவது தெரிவு செய்யப்படவில்லை. இதுதானா தார்மீகம். யாழ்ப்பாணத்தில் இன்று எந்தக் கல்லூரிகளிலும் உயர்வகுப்புக்களில் எல்லாப்பாடங்களையும் கற்பிக்கச்கூடிய பூரணமான ஆசிரியர் கிடையாது என்றார்.

### யாழ். மேயர் உரை

யாழ். மாநகர முதல்வர் திரு. இரா. விசுவநாதன் பேசியதாவது:

''இந்த நாட்டை ஜனநாயக நாடு எனக் கூறிக்கொள்ளும் அரசு தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையைக் கூடப் பறித்தெடுத்திருக்கிறது. ஒரு தொழிலாளியின் உயிர்கூட பறித்தெடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த வருடம் ஆனி மாதம் நிகழ்ந்த வன்செயற் சம்பவங்களுக்குப்பின் சர்வதேச மன்னிப்புச் சபையைச் சேர்ந்த ஒரு பிரதிநிதி என்னை இங்கு சந்தித்தார். அவர் என்னிடம் கேட்டார், பொதுஜன நூலகம் புனரமைக்கப்பட்டபின் மீண்டும் எரிக்கப்படமாட்டாதென்பதற்கு என்ன உத்தரவாதம் என்று அவரிடம் கூறினேன். எமது இறைமைஎம்மிடம்ஒப்படைக்கப்பட்டால்அது நிகழாமல் எம்மால் தடுக்க முடியும் என்று நாம் உருவாக்க இருக்கும் ஊர்காவற்படையில் இளைஞர்கள் சேர்ந்து கொள்ள வேண்டும். அப்படியானல் இனி ஒரு வன்முறைச் சம்பவமும் இங்கு நிகழ இடம் இருக்காது. திடமானதொரு காவற்படை எம்மிடம் இருந்தால் இப்படித் திடீர் திடீரென்று வவனியாவில் புத்தர்சிலை தோன்றுமா? என்றார்.

## "குடியுரிமை இழந்த தொழிலாளி இந்த மண்ணில்தான் வாழ்கின்றான்"

- காசி ஆனந்தன் -

### காசி ஆனந்தன்

கவிஞர் காசிஆனந்தன் பேசுகையில், 'உலகில் எந்தப்பக்கத்திலும் காண முடியாத ஒரு தொழிலாளி இந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். குடியுரிமை இழந்து பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட ஒரு தொழிலாளி இந்த மண்ணில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். அவனது கண்ணீரும் அவன் விடுகின்ற பெருமூச்சுமே இந்த மேதினத்திற்கு ஒரு சிறப்பளிக்கின்றது. அந்தத் தொழிலாளி ஏன் இப்படி இருக்கிறான் அவன் ஒரு தமிழன். அதனால்தான் அவன் தனது உரிமைகளை இழந்தும் இந்த மண்ணில் உழைத்துக் கொண்டிருக்கின்றான். மற்றத் தொழிலாளர்கள் சகல உரிமைகளுடனும் வாழ்கின்ற போது தமிழ்த் தொழிலாளி மட்டும் தன் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றான்,

'தந்தை செல்வாவும் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலமும் பிரிந்து நின்ற காலகட்டத்தை நினைவு கூருவோம். அன்று எதையுமே நாம் சாதிக்க முடியாதவர்களாக இருந்தோம். இன்று நாம் கட்டிக்காத்து வருகின்ற கூட்டணி என்ற அமைப்பைச் சிதைத்துவிடக்கூடாது தமிழர்கள் ஒற்றுமையோடு

(6ம் பக்கம் பார்க்க)

Stadium

மோட்டார் சைக்கிளோட்டிகளுக்கு
ஓர் நற்செய்தி
யாழ். மக்களின் ஏகோபித்த வேண்டுகோளை முன்னிட்டு
"ஸ்ரேடியம் மலிவு விற்பனை"
1-5-82 முதல் 5-5-82 வரை
நீடிக்கப்பட்டுள்ளதென்பதை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
உங்கள் தேவைகளுக்கு
இன்றே முந்துங்கள்
S. சின்னத்துரை அன் கொம்பனி
யாழ்ப்பாணம்.
கன்ரேபியா லிமிட்டெட்
யாழ்ப்பாணம்.
சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்டெட்
யாழ்ப்பாணம்.
மாருதி மோட்டார்ஸ்
பருத்தித்துறை.

## பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு பாரத்தனை ஐயனுர் ஆலய பரிபாலன சபையின் வருடாந்தப்பொதுக் கூட்டம் எதிர் வரும் 7ம் திகதி சபைத்தலைவர் திரு. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. சித்திரைக் கஞ்சி வழங்கலும் அன்று நடைபெறவுள்ளது.

**Regal** Jaffna
Daily 10-30, 2-15, 4-30, 7-00 9-30
Jim Brown–Jim Kelly
Lee Van Cliff
in
**Take a Hard Ride**
Action Packed
Three Great
Fighting Stars

மூன்ருவது வாரம்
**ஹரன்** யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
**தில்லுமுல்லு**

**வெஸ்லி** மானிப்பாய்
தினசரி 2.30, 6.15 9.15
எம். ஜி. ஆர். – லதா
**சுவர் இல்லாத சித்திரங்கள்**

**வெலிங்டன்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
**ராஜாவீட்டுப் பிள்ளை**
[புதிய பிரதி]

**லிடோ** தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
**JUNGLE BOOK**

**சாந்தி** (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15, 9-45
இந்தியாவிலிருந்து தருவித்த புதிய பிரதி
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
நாகேஷ்
**முத்துச்சிப்பி**
எதிர்பாருங்கள் கடல்மீன்கள் [கலர்]

**ராணி** தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
(யாழ். நகர்)
**TARZAN THE APE MAN**
(ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்** தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
**பொல்லாதவன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
2-வது மாதமாக
ஸ்ரீபிரியா, சுபாசினி, கமல், ரஜனி, நாகேஷ்
இன்னும் பல நட்சத்திரங்கள் நடித்த
**நட்சத்திரம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜா** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
3-ந் திகதி வரை
மஞ்சு பார்கவி நடித்த
**சங்கராபரணம்** [கலர்]
from 4th
FUTURE WOMEN

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
விஜயகுமார், ஜெயசித்திரா இருவேடம்
**தாயில்லா குழந்தை**
5-முதல் அலைகள் ஓய்வதில்லை

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 17ம் திகதி

திங்கட்கிழமை

(3—5—82)

மேடம்: இன்று முன்னணியில் நிற்பீர்கள். நல்ல தீர்ப்பு வளங்கும் சந்திப்பும் ஏற்படலாம். தெய்வ நம்பிக்கை மேலோங்கும் குறிக்கோளில் வெற்றியுண்டு.

இடபம்: வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு. புதிய முயற்சிகள் இன்று கைகூடும் செலவினங்களும் கையடங்கியதாகிய இருக்கும்.

மிதுனம்: நினைத்தகாரியங்களில் வெற்றியுண்டு. எதிர்த்தவர்களே உங்களைப் பாராட்டச் செய்வார்கள் வாழ்க்கையில் திருப்பமும் ஏற்படும் நல்ல தினம்.

கடகம்: மனத்தில் விரக்தி தென்படும் உடல் நலமும் பாதிக்கப்படலாம் கால் நடையினுல் நஷ்டம் ஏற்படலாம் வழக்கு விவகாரங்களும் நடைபெறும்.

சிங்கம்: நீண்டநாள் கடன் இன்று நிவர்த்தியாகும் துன்பத்தின் ரேகைகள் படரும் ஏமாற்றமும் அடையும் தொல்லைகள் தோன்றும்

கன்னி: பேச்சு வன்மையால் பெரும் புகழ் கிடைக்கும் பெரிய இடத்துச் செல்வாக்கைத் தேடித்தரும் வரவும் உயர்வு கிடைக்கும் நல்லதினமாகும்.

துலாம்: இதயத்தில் எரிமலை குமுறும் உள்வீட்டிலேயே உபத்திரங்கள் அதிகரிக்கும் குழந்தையொன்றின் உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

விருட்சிகம்: இதயத்தின் ஏக்கம் இன்று தணியும் பரோபகாரச் சிந்தை மேலிடும் நண்பர் ஒருவர் கைகொடுத்து உதவவருவார் செல்வாக்கும் பெருகும்.

தனு: பெரியஇடத்துச் சினேகிதம் இன்று ஏற்படலாம் சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும் புதுவழிகள் மூலம் பணம் பெருகும்.

மகரம்: அன்னிய பாசம் உங்களை ஆபத்தில் மாட்டி வைக்கும் சிறிய விடையத்துக்குக் கூட அதிகம் ஆத்திரப்படுவீர்கள். அடக்கம் வேண்டும்.

கும்பம்: சுவையான சம்பவங்கள் மனதுக்கு மகிழ்ச்சியைக் தேடித்தரும் தையும் ஒழுங்கு முறையில் செய்வதால் திருப்தியடைவீர்கள் கட்டுப்பாட்டில் நடப்பது நன்று.

மீனம்: கடமையில் தடைகள் ஏற்படும் பிறர் நம்பிக்கையைத் தவிர்த்து கொள்ளவும் தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத் தரலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## ஆலயப் புனருத்தாரணச் சபை

(வவனியா)

வவனியா கள்ளிக்குளம் ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலயப் புனருத்தாரணத் திருப்பணி வேலைகளைக் கவனிக்க ஒரு சபை நிறுவப்பட்டுள்ளது. பின்வருவோர் இச்சபையில் இடம் பெற்றுள்ளனர்.

தலைவர்: திரு. தா: சிவசிதம்பரம் எம். பி., உப-தலைவர்: டாக்டர் எஸ். இராஜசுந்தரம். காரியதரிசி; திரு. பொ. முத்தையா, இணைக் காரியதரிசி: மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. எம். சிற்றம்பலம், தனதிகாரி: திரு. ஏ. சி. நாகராசா, ஸ்தல நிர்வாகி: திரு. ந. செல்லையா. [அ]

## புதிய நிர்வாகிகள்

[நல்லூர்]

உரும்பிராய் விளையாட்டுக் கழகத்தினுல் இராப்போசன விருந்தும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் திரு. ந, மோகன் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் இலங்கை வங்கியின் பிரதேச முகாமையாளர் திரு. சிவலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நடப்புவருட நிர்வாகிகளாக தலைவராக த, நற்குணமாணிக்கம், காரியதரசியாக சி. திருமுருகன், பொருளாளராக ரஞ்சன் ஹண்டியும், மற்றும் பத்துபேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

# 'அபிவிருத்தி வேலைகள் எதுவுமே நடக்கவில்லை'

## காவலூர் எம். பி. கண்டனம்

(மண்டைதீவு)

"எமது கட்சியில் சேருவோர் மிகவும் கண்ணியமாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ளவேண்டும். எமது கட்சியில் சேர்ந்துவிட்டு ரகசியமாக ஆளும் கட்சி உறுப்பினர்களை ஆதரிப்பது துரோகச் செயலாகும்''.

இவ்வாறு அணலைதீவு தமிழர்விடுதலைக் கூட்டணிக்கிளை மீளமைப்புக் கூட்டத்தில் தலைமை வகித்து பேசுகையில் காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

''இங்குள்ள சிலர், ஆளும் கட்சி உறுப்பினர்களை வரவழைத்து விருந்து வைத்து காக்காய் பிடித்துள்ளார்கள். வந்தவர்களும் விருந்து உண்டுவிட்டு ''அலை அரசி' படகுச் சேவையை தினமும் இரண்டு முறை ஈடுபடுத்துவோம். இங்குள்ள வீதிகளைச் சீர்திருத்தித் தருவோம் என்று கூறிவிட்டுச் சென்ருர்கள். ஆனுல் எதுவித அபிவிருத்திவேலைகளும் நடைபெறவில்லை.

'' 981ம் ஆண்டு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா மிகுந்த ஆரவாரங்களுடன் வட பகுதிக்கு வந்து பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் தொகுதி அபிவிருத்தி பணத்தில் மகாதேவா பாலத்துக்கு பணம் ஒதுக்கிக் கொடுக்குமாறு கூறினுர். ஆனுல் இதுவரைபணம் ஒதுக்கப்படவும் இல்லை அபிவிருத்தி வேலைகள் நடைபெறவும் இல்லை. அகப்பை பிடிப்பவர்கள் அவர்கள் அதைக் கையேந்திநிற்பவர்களாக நாம் நிற்கிருேம். இந்தநிலை மாற வேண்டுமானுல் எமக்கென்று ஒருபிரதேசம் வேண்டும். அதைநாம் போராடிபெற வேண்டும்'' என்ருர்.

## நீர்வையில் இன்று

[நீர்வேலி]

நீர்வேலிக் கந்தசுவாமி கோவில் மாம்பழத்திருவிழா இன்ருகும். பகல் தைலாப்பியங்கமும் உற்சவமும் நிகழும். பிற்பகல் 3 மணிக்கு பழனியாண்டவர் மாம்பழத் திருவிழாவும் நடைபெறும். விசேஷ நிகழ்ச்சியாகத் தவில் கச்சேரியும் உபந்யாசமும் இடம்பெறும்.

இரவு மூதவாகனத்தில் சுவாமி எழுந்தருளுவார் (அ)

## தொழிலாளரின்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகியவவை படிப்படியாக ஏற்பட்டு வந்துள்ளது. கசுந்த தேர்தலில் போட்டியிட்ட ஜே. ஆர். தென்னிலங்கையில் எட்டு ருத்தல் உணவு தருவோம் என்று கூறினுர். வடக்கில் மூன்று மாதத்திற்குள் தமிழீழம் பெற்றுத்தருவோம் என்றும் அடுத்த மே தினம் தமிழீழத்தில் தான் நடக்கும் என்றும் கூறினுர் கூட்டணித் தலைவர் கூட்டணியின்வட்டுக்கோட்டைத்தீர்மானத்தையும் தமிழீழக்கோரிக்கையையும் அன்று தொட்டு இன்றுவரை எமதுகட்சி எதிர்த்து வருகிறது. இந்த நாட்டில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வருகிற ஒவ்வொரு காலத்திலும் தமிழ்த்தலைவர்கள் அரசுடன் இணைந்து தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்து வந்திருக்கிருர்கள். இவர்களில் திரு. அமிர்தலிங்கம் வேறுபட்டவரல்ல திரு. ஜி. ஜி. அரசுடன் சேர்ந்த பொழுது திரு. செல்வநாயகம் அவரை விட்டுப் பிரிந்தார். திரு. செல்வநாயகத்தின் தலைமையில் திரு. திருச்செல்வம் அரசுடன் சேர்ந்த பொழுது திரு. நவரத்தினம் அவர்களை விட்டுவெளியேறினுர். இன்று அமிர்தலிங்கம் தலைமையில் கூட்டணி அரசுடன் இணைந்து செயல் படுகின்ற பொழுது கூட்டணியை விட்டுபலர் வெளியேறி வருகிருர்கள்'' என்று குறிப்பிட்டார்.

தேசபக்த வாலிபர் இயக்கத்தைச் சேர்ந்த திருவாளர்கள் எஸ். இராசேந்திரன், இ. தம்பையா, நவலங்கா தொழிற்சங்கத்தைச் சேர்ந்த திரு. கா. பஞ்சலிங்கம் ஆகியோர் பேசினர். (அரி. நிரு.)

## வேலைநிறுத்தத்தில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

விளையாடக்கூடாது. பிரச்னை வரும்போது சிங்களமக்கள் ஒற்றுமைப்பட்டுவிடுகிருர்கள் ஆனுல் தமிழன் ஒன்றுபடுகின்றபோது பிரச்னைவந்துவிடுகிறது. இது தமிழினத்தின் சாபக்கேடு.

35 லட்சம் தமிழர்கள் இந்த நாட்டில் வாழ்கிருர்கள் என்று எழுதலாம். ஆனுல்அவர்களில் ஐந்து லட்சம் பேரே நமது இயக்கத்தோடு ஈழவிடுதலை என்ற இலட்சியத்தோடு—தோளோடு தோள் நின்று உழைக்க முன்வரத்தக்கவர்கள். இந்த வகையிலே உலக அரங்கிலே மிகச்சொற்பபலத்தைமட்டுமே கொண்ட நாங்கள் நமக்குள் மேலும் மேலும் பிரச்னைகளைவளர்த்துக் கொள்வதா?

காலத்திற்குகாலம் ஆட்சியாளர்கள் நம்மைப்பிரித்து வந்துள்ளார்கள். மலையகம் என்று பிரித்தார்கள். பின்னர் வடக்கு-கிழக்கு என்று பிரித்து அந்தச் சூழ்ச்சியில் வென்ருர்கள் இஸ்லாமியர்கள் ஆரம்பத்தில் எங்களுடன் இருந்தார்கள். அவர்களையும் மெல்ல மெல்லப்பிரித்தார்கள். எஞ்சியிருந்தவர்களை எப்படிப் பிரிக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தவர்கள் தந்தை செல்வாவோடு காலிமுகத்திடலில் நடந்த சத்தியாக்கிரகத்திலும் சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்திலும் கட்சிகளை மோதவிட்டுப் பிரித்தார்கள். நான் இந்தியாவில் இருந்தபோது தமிழ்நாடு சபாநாயகர் திரு. ராஜாராம் என்னிடம் சொன்னுர் அங்கு பேரறிஞர் அண்ணு கட்டிக்காத்த ஒற்றுமையை வடநாடு கண்டு அஞ்சிய ஒற்றுமையை அண்ணு திராவிட முன்னேற்றக் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் சிதறடித்துவிட்டன. அவ்வாறுன நிலையை இலங்கையிலும் உருவாக்கி விடாதீர்கள் என்ருர்.

ஈழவிடுதலைப் பிரகடனத்தை நமது மண்ணில் ஒரு பிடியையாவது மீட்டெடுத்துக் கொண்ட பின்னர் அல்லது எமது நாட்டை அங்கீகரித்துக் கொண்ட ஒரு நாட்டில் நின்று கொண்டு நிறைவேற்றியிருந்தால்தான் அது உத்தியோகபூர்வமானதாக எங்களாலும் மற்றவர்களாலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்கும். அதைவிடுத்து எங்கோ ஒரு நாட்டில் நின்றுகொண்டு செய்த பிரகடனத்தை முற்றவெளி புல் தரையில் இருந்து கொண்டு வாசிப்பதன் மூலம் எந்தவிதமான பயனும் ஏற்படப்போவதில்லை''.

## பயங்கர

4ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த காலங்களில் துப்புத் துலக்க முடியாமற்போன பல பயங்கரவாதச்செயல்களை இச் சுவரொட்டி மூலம் வெளிக் கொண்டரலாம் என்று பொலிசார் நம்புகின்றனர். (கு)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட Buma (பூமா போறிங், பொலிசிங், வால்வ் சீட்வெட்டும் இயந்திரங்கள் உடன் விற்பனைக்குண்டு. உடனடியாக கீழ்வரும் விலாசத்திற்குத் தொடர்புகொள்க. க. பொன்னுச்சாமி, 28/3, மணல்தறை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 3032

இல: 242 வில்வந்தெரு வீதி, கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணத்தில் இரண்டு பரப்பு சற்சதுரகாணி வீடு கட்டுவதற்கும் கடை கட்டுவதற்கும் உகந்தது. தொடர்பு M. கணேஸ் 183, கண்டி வீதி, மாம்பழம் சந்தி, அரியாலை. 3055

## தேவை

ஆங்கில மருர்து விற்பனையாளர் தேவை நன்கு அனுபவமும், நேர்மையும், நம்பிக்கையும் பொறுப்பும் உள்ள ஆங்கில மருந்து விற்பனையாளர் தேவை. எதிர்பார்க்கும் சம்பளம் நற்சாட்சிப் பத்திரம் முதலியவற்றுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3033, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 3033

## பயிற்சி

றேடியோ – டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங் வெல்டிங் (சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன்) HOTELMANAGEMENT FRENCH (4.30 p.m. வகுப்பு) GERMAN வகுப்புக்கள் ஆரம்பம் 3–5–82 அனைவரும் சேரலாம் நேரில் வரவும். நாஷனல் அக்கடமி, மொம்சாக்கட்டிடம் 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3008

## நீர்ப்பாசன இலாகா கிளிநொச்சி

கிளிநொச்சி நீர்ப்பாசனப் பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகத்தில் கேள்விப் பத்திரசபையின் தலைவரினால் கீழ்வரும் வேலைக்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரம் அனுப்புதற்கு நீர்ப்பாசனத்திணைக்களத்தில் ரூபா 180,000/- க்கு அல்லது அதற்குக் கூடிய தொகைக்கு பதிவு செய்யப்பட்ட அல்லது வேறு அரச திணைக்களங்களில் ரூபா 50,000/- க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டுமே தகுதி உடையோராவர்.

### வேலை விபரம்

''பாரமான மண் ஏற்றி இழுக்கும் இயந்திரத்தினல் கிளிநொச்சிப் பிரிவிலுள்ள கந்தன் குளம் குளமுறிவுக்கு மண்போடுதலும் திருத்தவேலையும்.''

கேள்விப்பத்திரங்கள் 10 – 05 – 1982 தொடக்கம் 21 – 05 – 1982 வரை வழங்கப்படும். கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்த வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1982 ம் ஆண்டு வைகாசி மாதம் 25 ந் திகதி காலை 10–00 மணிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

க. குமாரசுவாமி
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கிளிநொச்சி
3044

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கொக்குவில், கொக்குவில் மேற்கு காலஞ்சென்ற சுப்பிரமணியம் நாகலிங்கம் சோமநாதனின் மரணசாதனமெழுதப்படாத சொத்துக்களின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரீ/3640

1. சண்முசேந்திரம் சீனிவாசகமும் பெண்
2. கமலாம்பிகையும் இருவரும் கொக்குவில்மேற்கு, கொக்குவில். தற்பொழுது இல. 37 அலிசன் றோட்டு, கறிங்கே லண்டன் 8 ஆகியோரின் தத்துவகாரன் நாகலிங்கம் இரத்தினசபாபதி இல. 28 நல்லூர் குறுக்குத் தெரு, நல்லூர்.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு மே மாதம் 14ஆந் நாளன்று முற்பகல் 9–00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருக தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறுஇத்தால் தேவைப்படுத்தப்படுகின்றன.

நீதிமன்றக் கட்டளைப்படி

(ஒப்பம்)
தா. குலஞானம்
பதிவாளர்.

1982ம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 15ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

தயாரித்தது,

பொ. நவரத்தினம்
மனுதாரின் சட்டத்தரணி.
3048

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

தெல்லிப்பளை கொல்லன்கலட்டி காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தையாவின் மரணசாதன மெழுதுப்படாத சொத்துக்களின் விடயத்தில்.

மரண மெய்தியவர்

மரணசாதன நியாதிக்கம் T/3625

தெல்லிப்பளை கொல்லன்கலட்டி தற்பொழுது லண்டன் கென்றடாட் போட்டில் வசிக்கும்வைத்திய கலாநிதி கந்தையா சிவகுமாரின் தத்துவகாரர் ஆனைக்கோட்டை சின்னப்பா கனகரத்தினம் கந்தசாமி

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982–ஆம் ஆண்டு மே மாதம் 14–ஆந் நாளன்று முற்பகல் 9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருக தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்,
(ஒப்பம்)
பதிவாளர்

1982–ம் ஆண்டு பங்குனி மாதம் 19–ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

3047

## அரசுகளுடன் பேசுவதில் என்ன தவறு? 'தர்மர்' கேட்கிறர்

(நல்லூர்)

''நாம் பேச்சு வார்த்தைகளை நடத்துவது கட்சிகளுடன் அல்ல. காலத்திற்குக் காலம் அரசுகளுடனேயே பேச்சு வார்த்தை நடத்துகின்றேம்.''

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ். நகர மண்டபத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் தொழிற்சங்கக் கூட்டணிகளின் மேதினக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கூறினர் அவர் தொடர்ந்து தமதுரையில் குறிப்பிட்டதாவது;

''நான் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வேனே என்ற சந்தேகம் சிலருக்கு இருந்திருக்கலாம். எங்களது ஜீப்பை அடித்து நொருக்கியோ துப்பாக்கியைக் காட்டியோ எங்களைப் பயறுத்த முடியாது. தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களுகு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் வதந்திகளுக்குப் பதிலளிக்க வேண்டியவனுக உள்ளேன் தந்தை செல்வாவைப் பின்பற்றுகின்றனர்கள் தாங்கள் தான் என்று சொல்லி திரியும் சிலர் எம்மைப்பார்த்து நாம் அரசாங்கத்துடன் பேசுவது தவறு என்கிறர்கள் ஐக்கிய தேசியக்கட்சியைத் தழுவுகின்றவர்கள் என்கிறர்கள் தமிழ் இளைஞர்கள் துன்பப்படுகின்ற இந்த வேளையில் என்ன பேச்சு வார்த்தைகள் வேண்டியிருக்கின்றது என்கிறவர்களைப் பார்த்துக்கேட்கிறேன், திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் ஆட்சிக்காலத்தில் தம்பிமார் காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், மாவை ஞேதிராசா போன்றவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு உண்ணவிரதம் இருந்த நேரத்தில் தந்தை செல்வா நேரடியாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்குக் கடிதம் எழுதி 'நான் எனது இளைஞர்களைச் சிறையில் சென்று பார்க்கவேண்டும். அதற்குஅனுமதி தாருங்கள்' என்று கோரிக்கை விடுத்தார். அதேபோன்று

(8ம் பக்கம் பார்க்க)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் அரசடி வீதி இல. 84/2 காலஞ்சென்ற ஆறுமுகம் நடராசா கைம்பெண் மனேன்மணி என்பவரின் மரணசாதன விடயத்தில்.

மரணமெய்தியவர்

மரணச்சொத்து நியாயாதிக்கம் இல. 3650

யாழ்ப்பாணம் பிறவுன் வீதி இல. 43ம் தற்போது கொழும்புவெள்ளவத்தை இராஜசிங்கா வீதி இல. 27 கலாநிதி நடராசா விக்னராசா

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்டமரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982 ஆண்டு மே மாதம் 14ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டபின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப் படுகின்றர்.

1982–ம் ஆண்டு சித்திரை மாதம் 27.

நீதிமன்றத்தின் கட்டளைப்படி

தா. குலஞானம்.
(பதிவாளர்)

3045

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த மரணசாதனமின்றி காலஞ் சென்ற ஆ. கே. இரத்தினசபாபதியின் மரணச் சொத்துச் சம்பந்தமான விடயத்தில்

மரணமெய்தியவர்

இரத்தினசபாபதி கைம்பெண் நாகரத்தினம் உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்

மனுதார்.

இல. ரீ/3636

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் ஆஸ்தியை நிர்வகிப்பதற்காக மேலே சொல்லப்பட்ட இலக்கமுடைய வழக்கைத் தாக்கல் செய்து அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறியத் தரப்படுகின்றது.

இதில் அக்கறையுடைய எவரேனும் குறித்த பின்னுறுதித் தீர்வையை ஏன் பூரணப்படுத்தப்படலாகாதென்பதற்கு தகுந்த காரணமிருப்பின் 1982ம் ஆண்டு ஆனி மாதம் 4ந் திகதி காலை 9–00 மணிக்கு இம் மன்றில் தோன்றி காண்பிக்குமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1982ம் ஆண்டு சித்திரை மாதம் 21ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

(ஒப்பம்)
தா. குலஞானம்
பதிவாளர்
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

வரைவு
சி. சுரேந்திரன்
மனுதார் சட்டத்தரணி.
3027

## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: ஈடு 4495
ஆறுமுகம் சிவகுரு — அல்லாரை தெற்கு, மீசாலை
—வழக்காளி

இறந்த 1. அருணுசலம் குமாரவேலுவும்
2. நாகம்மாவும் இருவரும்—
4–ம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
—எதிராளி

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு 4495 இல வழக்கில் எனக்குக்கிடைத்த கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் காணியை 01–07–82ம் ஆண்டு வியாழக்கிழமை 11 மணி 30 நிமிடம் தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை :

முதல் வட்டி ரூ. 8788–33 சதம் மேலும் ரூபா 5000த்திற்கு 26–4–76 தொடக்கம் 04–03–77 வரைக்கும் 12 வீத வட்டியும், 5–3–77 தொடக்கம் 1–7–82 வரைக்குமுள்ள வட்டியும் அதன் மேல் முழுத்தொகை இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்செலவு ரூ. 864.00 சதம்.

### காணியின் விபரம் :

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் பூநகரிப்பகுதி பூநகரிக் கோவில் பற்று ஞானிமடம் இறை ''இலந்தைப் பிட்டி நிலம் பரப்பு $38\frac{1}{4}$ வடலிகளும் செய்பயிர்களும் வான் பயிர்களும், எல்லை கிழக்கு கி. பொன்னரின் உரிமைக்காரரும், மறுபேருக்குமுரியவாதனம். வடக்கு கார்த்திகேசு சின்னத்தம்பிக்குரிய ஆதனம். மேற்கு சின்னத்தம்பி கந்தையாவுக்கும், மறுபேருக்குமுரியவாதனம். தெற்கு நல்லதம்பி மகள் வள்ளியம்மைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் இதடங்கலும் இதடங்கலும் பதிவு இல. ஜி. 118/125.

ப. ரஜினி
சொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

நுணுவில் கிழக்கு,
சாவகச்சேரி.
3019

## தென்மராட்சிக் கலைமன்றம்

சாவகச்சேரி

14-4-82ல் நடைபெற்ற அதிஸ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசுக்குரிய டிக்கற் இலக்கங்கள்:

02358, 02288, 00314, 00879, 02413, 03696, 05146, 03393, 00099 06727, 00565, 07795, 03293.

கோரப்படாத பரிசுப் பொருள்கள் 8–5–82 பி. ப. 4–30 மணிக்கு மன்றக் கட்டிடத்தில் பகிரங்க ஏல விற்பனைமூலம் விற்கப்பட்டு நிதி மன்றத்திற்குப் செ[illegible]

3056

# "அரசுக்கு எதிராக முற்போக்குச் சக்திகள் ஒன்றுபடவேண்டும்!

## மாவட்டசபைகளினுல் நன்மையில்லை"

(யாழ்ப்பாணம்)

மாவட்ட அபிவிருத்தி சபைகளினுல் எதுவித பலனும் இல்லை. மாவட்ட அபிவிருத்திசபைகள் இயங்குவதற்கு அரசு பணம் ஒதுக்கிக் கொடுப்பதற்கு பதிலாக அப்பகுதி மக்களை சுரண்டியே அபிவிருத்திவேலைகளை செய்ய வேண்டுமென்று கூறுகின்றது. இதற்குச் சிங்கள மக்கள் தயாராக இல்லை. இந்த நிலையில் எப்படி மாவட்ட அபிவிருத்தி சபைகளால் தமிழ் மக்கள் நன்மையடைய முடியும்?''

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (சண் பிரிவு) வடபிரதேச கிளையினரின் மேதினக்கூட்டத்தில் கட்சியின் வடபகுதிகிளைச் செயலாளர் ஜனுப் எம்.சி. இக்பால் கலந்து கொண்டு பேசுகையில் கேள்வி எழுப்பினுர்.

இக் கூட்டம்திரு.சூ.மார்க்கு தலைமையில் யாழ். திறந்த வெளியரங்கில்நடைபெற்றது. ஜனுப் இக்பால் மேலும் கூறியதாவது:-

''இந்தநாட்டில் முதலாளித்துவம் வளர்ந்து வருகின்றது. சோவியத் ஏகாதிபத்தியத்துடனும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனும் தார்மீக அரசு ஒட்டி உறவாடி வருகின்றது. இதன்பயனுக எமது நாட்டின் இயற்கைத் துறைமுகமான திருகோணமலைத் துறைமுகத்துக்கு அண்மையில் 675 ஏக்கர் காணியை அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்கு தாரைவார்த்துகொடுத்துள்ளது. யு. என். பி. அரசு!

''முதலாளித்துவ நாடுகளில் ஆயுதம் தாங்கிய போராட்டங்கள் மூலம் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளை வென்று எடுத்துள்ளனர் அமெரிக்காவிலுள்ள கிக்காக்கோவிலுள்ள. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், எட்டு மணித்தியால வேலைகோரி ஆயுதப்போராட்டம் நடத்தினுர்கள். முதலாளித்துவ ஏகாதிபத்திய வாதியான அமெரிக்கர்கள் பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்களைச் சுட்டு வீழ்த்தினர். அதற்கும் அஞ்சாது, அவர்களுடன் தொடர்ந்து போராடி தங்கள் கோரிக்கையை வென்றெடுத்ததினமே மேதினமாக உலக பாட்டாளி மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

''சோவியத் யூனியனில் முதலாளித்துவ அரசு வேருன்றி தொழிலாள வர்க்கத்தை ஆக்கிரமிப்பு செய்து வந்தது. பாராளுமன்ற மூறையில் ஆட்சி அங்கும் நடைபெற்றது இதை அங்குள்ள தொழிலாள வர்க்கம் எதிர்த்து அவர்களது ஆக்கிரமிப்பையும் அடக்குமுறையையும் போராட்டத்தின் மூலம் உடைத்தெறிந்தது, லெனின் தலைமையில் தொழிலாளர்கள் விவசாயிகள் கொண்ட சோசலிச அரசு நிறுவப்பட்டது.

அதேபோல் இந்தநாட்டில் இனவாதத்தையும் வகுப்புவாதத்தையும் கக்கி, இனவெறியை தூண்டி, தனதுஅதிகாரத்தால் மக்களை அடக்கி ஒடுக்கிக் கொண்டிருக்கும் யு. என். பி. அரசை ஒழித்து கட்ட வேண்டுமானுல் இந்த நாட்டில் இருக்கும் முற்போக்கு சக்திகள் ஒன்று திரண்டு, போராட்டத்தின் மூலம்தான் முதலாலித்துவத்தை ஒழித்துக் கட்டமுடியும்

மற்றும் திருவாளர்கள் கே. செல்லத்துரை, எஸ். தியாகராசா உட்பட பலர் உரையாற்றினுர்கள். (மண்-நி)


## மரண அறிவித்தல்

### இளையதம்பி தம்பிப்பிள்ளை

இளையதம்பி தம்பிப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், துரைசிங்கம் (Post Master), காலஞ்சென்ற திருமதி இந்திரா தனராசா (கல்வி வெளியீட்டுத் திணைக்களம்), ஜெகசோதி சுந்தரலிங்கம் (சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), பத்மநாதன் (U. K.), இராசலட்சுமி, புஸ்பலிங்கம் (U. K.) ஆகியோரின் அன்புத் தந்தையும் மற்றும் சரோஜினி துரைசிங்கம் (கனகரத்தினம் M.M.V.), தி. விஞயகலிங்கம் (F.A.A. M.C.), சரோஜினி சுந்தரலிங்கம் (மாவட்டசபை அலுவலகம், யாழ்ப்பாணம்), பொ. யோகானந்தன் (R. V. D.B. Embilipitiya) ஆகியோரின் மாமனுருமாவார்.

அன்னுரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக 57, புங்கன் குளம் வீதியிலுள்ள இல்லத்திலிருந்து இன்று (3-5-82) மாலை 4-00க்கு அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

3060

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சம்பந்தர்

நீர்வேலி மேற்கியைச் சேர்ந்த ஆறுமுகம் சம்பந்தர் (மாமா) காலமானுர். அன்னுரின் ஈமக்கிரியைகள் 3-5-82 திங்கட்கிழமை நண்பகல் நடைபெறும் உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும். 3061

## மரண அறிவித்தல்

### திருமதி சி. பேரம்பலம்

ஏழாலை

பிரபல வைத்தியர் அ. பேரம்பலம் அவர்களின் பார்யாரும் காலஞ்சென்ற பேராசிரியர் கனகசபாபதி, சிவலிங்கம் (C. W. E.) கொழும்பு, வாமதேவன் (கச்சேரி, வவுனியா), பாலசுப்பிரமணியம் (ஆசிரியர், வைத்தீஸ்வராக்கல்லூரி), Dr. பத்மநாதன், மகாதேவன் (கணக்காளர்), திருமதி புனிதவதி முருகவேள், திருமதி இராஜராசேஸ்வரி தெய்வேந்திரன், திருமதி சாரதாதேவி இளமுருகதாஸ், திருமதி மாலினி கவீந்திரராசா ஆகியோரின் தாயாருமான சின்னம்மா பேரம்பலம் 2-5-82 இல் காலமானுர். மரணச் சடங்குகள் 3-5-82 நண்பகல் ஏழாலை மேற்கில் நடைபெறும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

அ. பேரம்பலம்

3057


### விசர்நாய்க்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னுர் பட்டினத்தில் கட்டாக்காலி நாய்களை ஒழிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததாலேயே மன்னுர் பட்டின வீதிகளில் விசர்நாய் தொல்லை அதிகரித்து மன்னுர் பட்டின வீதிகளில் மக்கள் நடமாட முடியாத நிலைஏற்பட்டுள்ளது.

### அரசுகளுடன்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களுடைய பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதற்காக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்களை மாத்திரமன்றி ஏனைய எம். பி.க்களையும்அழைத்து மாநாட்டை நடத்தினுர். அதன்பின்னர் நாம் எம்மை மட்டும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்துங்கள் என்று கோரியபோது திரு. தொண்டமானையும் அமிர், சிவா, தந்தை செல்வா நண்பர் கதிரவேலுப்பிள்ளை ஆகியோரையும் அழைத்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தினுர். அந்த வழியிலேயே நாமும் செல்கிரும். நாம் காலத்துக்குக் காலம் எந்த அரசியற் கட்சியுடனும் சேர்ந்தது கிடையாது. அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது எந்தவகையில் தவருனதாகும் என்று கேட்டார். (அ)

# "12,000 தமிழ் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புக"

(யாழ்ப்பாணம்)

''கடந்த பொதுவேலைநிறுத்தத்தில் வேலைஇழந்தவர்களுக்கு உடனடியாக வேலைவழங்க வேண்டும். மீளவும் வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களுக்கு சிலதிணைக்களங்களில், கூட்டுத்தாபனங்களில் காட்டப்படும் பாரபட்சத்திற்கு கண்டனம் தெரிவிப்பதுடன், வழங்கப்படாதிருக்கும் வேதனத்தை உடன் வழங்கவேண்டுமென்றும் தீர்மானிக்கிறது''

யாழ். நகர மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ் தொழிற்சங்க கூட்டணி மேதினக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் நிறைவேறிய மேலும் சில தீர்மானங்கள் வருமாறு:

''வட, கிழக்கு பிராந்திய போக்கு வரத்துச் சபைகளில் வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டதால் வேலையிழந்தவர்களுக்கு உடன்வேலைவழங்க வேண்டும். தகுதியற்றவர்கட்கு முறையற்ற ரீதியில் பதவிஉயர்வு மேற்படி சபைகளில் வழங்கப்படுவதற்கு ஆட்சேபம் தெரிவிக்கின்ருேம்.

''பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பிரச்னைகளுக்கு உரிய தீர்வுகாண்பதுடன், அத்தொழிலாளர்கட்கு உடன் வேலைவழங்கவேண்டும். சிங்களத்தேர்ச்சியின்மை காரணத்தால் பதவியிழந்த தமிழ் பேசும் தொழிலாளர்களுக்கு உடன் வேலைவழங்கவேண்டும், அத்துடன் சிங்களத்தேர்ச்சியின்மை காரணமாக வயதடைந்து ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு உடன் ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்றும் சிங்கள தேர்ச்சியின்மையால் பதவியுயர்வு மறுக்கப்பட்டு நியாயமான முறையில் பதவி உயர்வுகள் தரபபடவேண்டுமென்று தீர்மானிக்கின்ருேம்,

''கூட்டுத்தாபனங்களில், திணைக்களங்களில் ஆறுமாதங்களாகப் பணிபுரியும் சமயாசமய ஊழியர்களின் பதவிகளை நிரந்தரமாகவேண்டும். தோட்டத் தொழிலாளர்கட்கு மாதச்சம்பளம் வழங்க வேண்டும், தனியார்துறை- கூட்டுறவு ஊழியர்கட்கு மாதம் ரூபா 107/- விசேடபடியை வழங்கவேண்டும். தனியார் கூட்டுறவுச்சங்க வகுப்புத் தொழிலாளிகளாக கடமையாற்றும் தொழிலாளிகளின் நாளாந்த ஊதியத்தை ரூபா 40 ஆக அதிகரிக்க வேண்டும். 12,000 தமிழ் ஆசிரியர் வெற்றிடங்களை உடன் நிரப்ப வேண்டும். பதவியுயர்வுகளில் தமிழ் ஆசிரியர்கட்கு காட்டப்படும் புறக்கணிப்பிற்கு கண்டனம் தெரிவிப்பதுடன் பதவியுயர்வுகளில் சம நீதி காட்டப்படவேண்டும். அரசினுல் சுவீகரிக்கப்பட்ட மலையக பாடசாலைகளின் கல்விநிலைமை மோசமாகவுள்ளதால், ஏனைய அரச பாடசாலைகளுக்கு அளிக்கப்படும் வசதிகளை இவர்களுக்கு வழங்க வேண்டும்''.

மேற்படி 14 தீர்மானங்களையும் தமிழ் தொழிற்சங்க கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. த. மகாசிவம் முன்மொழிந்து உரையாற்றினுர். (சி)

### இனத்திற்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய பாராளுமன்ற முதல் அமர்வில் எனது உரை தம்பிகள் சிலருக்கு புரியாவிடினும், அமைச்சர் ஆனந்ததிஸ்ஸடி அல்விஸ்ற்கு நன்ருகப் புரிந்தது. நகைச்சுவையாக பேசும் அவர்; அன்றுதான் உள்ளக் கிடக்கையை வெளியில் சொல்லுமளவிற்கு அவ்வுரை அமைந்துவிட்டது. அவர் கூறியபடி எமது மக்களிடையே பிரிவுகள் அதிகரித்ததால் அமைச்சர் சிறில்மத்தியூ நம்மைத் தலைமைதாங்கினுல் ஆச்சரியப்படுவதற்கில்லை, எனவேதான் தம்பிமாரைக் கேட்டுக்கொள்கிறேன் எங்கள்பாதை சரியில்லையென்ருல் உங்கள் பாதையில் போங்கள். அதை விடுத்து எம்முடன் மோதாதீர்கள். எமது இனத்தின் ஒற்றுமையை சிதைக்காதீர்கள். உங்களை நீதிமன்றத்தில் நிறுத்தும்போது எங்கள் தலைவர் சிவாவின் குரலே நீதிக்காக அங்கு ஒலிக்கும் என்பது உலகறிந்த ஒன்று.

எனது சிபார்சில் பெறப்பட்ட வெளிநாட்டுப் பணத்தைக்கொண்டு அரசியல் நடத்த முற்பட்டிருக்கிருர்கள் சில தம்பிமார். சமூகசேவை நோக்குடன் தரப்படும் அப் பணித்தில் கிடைக்கும் சில வசதிகளைக்கொண்டு அரசியல் நடத்தி, புதிய இயக்கம்காண நினைத்தால் அது வெறும் பகற்கனவாகிவிடும்.

புதிய பாராளுமன்றத்தில் நான் ஆற்றிய உரையை பல்வேறு வெளிநாட்டுத் தூதுவர்கள் சிறப்பு விருந்தினர்கள் கேட்டார்கள். பிரித்தானிய துணை அமைச்சர் ஒருவர், ஜேர்மன் பத்திரிகையாளர் ஒருவர் பிரதிகள் தருமாறு கோரினுர். இந்த நல்ல வாய்ப்பை நாம் பயன்படுத்துவதில்என்னதவறு


## ஹோம் பிரின்ஸ் லிமிட்

நவீனமானதும் திறமைமிக்கதுமான

**ORION-12''** (T. V BLACK and WHITE)

விற்பனை செய்கின்றது

உடனே கட்டுப்பண முறையில் பெறலாம்

விலை ரூபா 2100|- மட்டுமே

எம்மிடம் உள்ள அவசர தேவையான

மற்றைய பொருட்கள்

HAWAI-LUXURY PEDESTAL FAN-TABLE FAN

PHOENIX CYCLES - மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்கு HELMET.

இப் பொருட்களை 420, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்திலும் பெறலாம்

| தலைமை காரியாலயம்: | கிளை காரியாலயம்: |
|---|---|
| ஹோம் பிரின்ஸ் லிமிட் | ஹோம்பிரின்ஸ் லிமிட் |
| இல் 463 காலி வீதி | இல. 82 கன்னதிட்டி வீதி |
| கொழும்பு-3 | யாழ்ப்பாணம் |
| தொலைபேசி: 58910 | தொலைபேசி: 8310 |


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஹு மே மீ 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office, Sri Lanka under number Q.B. 100236/81.
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.